
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை { உள நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }





| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ புரட்டாசி மீ 2உ (18—9—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 21



இனம்! இனம்!! இனம்!!!

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்ரப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்ற முள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—0—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நீப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH |PEOLEP
George Town, Madras.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

## 'ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனம்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம் போட்டோவின் அளவு 3¼"x 2¼" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

## $ 500 இனும்! $ 500 இனும்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.




இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது.

இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தன வந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை செட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் முதலியவைகளை போக்கி சுறுசுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சொட்டாசின் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்தர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள் வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
கு. லாஸரஸ் பண்டிதன்
ஸ்ரீமத் T. R. மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணுக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக் கூடிய லேகியம் $ 3-75

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது


## சுவாமி விவேகாநந்தரின் ஆப்த வாக்கியம்.

"ஒரு தேசத்தின் திரவியமும் பராக்கிரமும் அத் தேசத்திலுள்ள சில்லோரிடமே இருக்கின்றன. தாங்கள் யாதொரு வேலையையும் செய்யாமலே அன்னோ! கோடானுகோடி ஜனங்களுடைய தொழில்களின் பலனை தங்கள் இஷ்டப்படி அனுபவித்து வருகின்றார்கள். அச்சில்லோர தங்களிடம் இருக்கும் இவ்வல்லமையினால் உலக முழுவதையும் இரத்தக்காடாக்கக் கூடியவர்களாய் இருந்து வருகின்றனர். மதம் முதலியயாவும் அவர்களின் காலடியின் கீழ் தான், ஆட்சிபுரிவோரும அவர்களே. உன்னத நிலையில் இருப்பவர்களும் அவர்களே. பழிபாவத்திற்கு அஞ்சாத இந்தச் செல்வர்களாகிய கொாதகர்கள் சில்லோரே ஆயினும், மேல் நாடு (ஐரோப்பா) முழுமையும் இவர்களுடைய ஆளுகைக்குள்ளான இருந்து வருகின்றது. நீதி வாய்ந்த ஆளைத்தனம், சுயாதீனம், சுயேச்சை, பிரதிநிதி சபை, என்பதாக நீங்கள் கேள்விபபடும் இவை யெல்லாம் வெறும் பேச்சும வேடிக்கைக் கூத்துமன்றி வேறொன்றுமில்லை. இந்த காதகர்களின் இம்சையால் மேல் நாடு (ஐரோப்பா) முற்றும் கதறுகின்றது. கீழ் நாடோ (இந்தியா உட்பட ஆசியாவோ) எனின் புரோகிதர்களுடைய வசத்தில் அகப்பட்டுக் கண்ணீர் விடுகின்றது"

பகவான் சுவாமி விவேகாநந்தருடைய இந்த ஆப்த வாக்கியத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் இப்பிராமண புரோகிதர்களுடைய கொடுமை, பொறாமை, மோசம், முதலியவைகள் இவ்வளவு தான் என்று கணக்கிட்டுச் சொல்லக் கூடுமா? பகவான் விவேகாநந்தரே இந்தியா உள்பட ஆசியா புரோகிதர்களுடைய வசத்தில அகப்பட்டு கண்ணீர் விடுகின்றது என்றுச் சொல்லத் துணிந்தார் என்றால், ஊரார் உழைவை ஏமாற்றி புசிக்கும் இந்த புரோகிதர்களுடைய இம்சை, கொடுமை, பொறாமை பகவான் விவேகாநந்தரவர்களையே எவ்வளவு தாக்கி துன்புறுத்தி மூன் வாவொட்டாமல் செய்திருக்கிறதென்று நினைக்க மனம் இடம் தாவில்லையா? இனிமேனும் அந்த புரோகிதர்களுடைய வசத்தில் அகப்படாமல் சுயமரியாதையை பெற்று இன்புற்று வாழும்படி எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திக்கிறேன் என்று ஸ்ரீமான் சாமுண்டி நாயுடு எழுதுகிறார்.

---

## அநுதாபம்.

மதுக்கரை, ஸ்ரீமான் வீரப்ப முதலியார் பாரியாளும், கோவை வக்கீல் ஸ்ரீமான் ம. வீ. மீனாக்ஷிசுந்தர முதலியாரவர்களின் தாயாருமான ஸ்ரீமதி வள்ளியம்மாளவர்கள் நாளது பிரபவ ஆண்டு ஆவணித் திங்கள் ஞாயிற்றுக்கிழமை விண்ணுலகடைந்தார் என்பதைக் கேட்டு வருத்தப்படுவதுடன் அவர்களுடைய குடும்பத்திற்கும் நமது அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

---

தென்னாப்பிரிக்காவில் பார்ப்பனர் சமத்துவம் கேட்கிறார்கள்.

இந்தியாவில் பார்ப்பனர்! தெரு வழி விடுவதில்லை.

---

# சுயமரியாதை சத்தியாக்கிரகம்

## ஸ்ரீ தண்டபாணி பிள்ளை தமிழர்களுக்கு செய்துகொள்ளும் பெரு விண்ணப்பம்.

மக்களில் சிறந்தவரும் பிராமணரல்லாதாருமான வீரச்சகோதரிகளே, சகோதரர்களே, நான் சென்ற ஆகஸ்டு மாதம் 20 தேதி சென்னையில் சத்தியாக்கிரகத்தைப் பற்றி பிரசங்கித்ததை "தமிழ் நாடு," "திராவிடன்" ஆகிய தினசரிப் பத்திரிக்கைகளில் பிரசுரித்து அதில் கூறப்பட்டுள்ள பிராமணரல்லாதாரின் உணர்ச்சியையும் கொள்கையையும் முறையையும் திட்டத்தையும் ஆதரித்து 22 தேதியும் 26 தேதியும் முறையே தலையக்கங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ்வாரப்பத்திரிகைகள் பலவும் மேற்கண்ட தினசரிகளைப் பின்பற்றி ஆதரவுடன் எழுதிவருகின்றன. சேலம் பி. வரதராஜுலு நாயுடு, ஈரோடு ஈ. வி. ராமசாமி நாயக்கர், சென்னை ஜே. எஸ். கண்ணப்பர் முதலிய பத்திராதிபர்களும் இதை ஆதரிக்கத் தயாராயிருக்கின்றனர். சென்னை, பட்டுக்கோட்டை, தஞ்சை, நாகர் கோவில், திருச்சி, மதுரை, காஞ்சி, சேலம், கோவை, திருநெல்வேலி, தேவகோட்டை முதலிய ஊர்களிலிருந்து, இவ்வியக்கத்தை நான் முன்னின்று நடத்துவதாயிருந்தால் ஆள் பலமும், பொருள் பலமும் தேவையானது அவசியமானபோது தாராளமாய்க்கொடுத்து உதவப்படுமென உற்சாகமூட்டும் கடிதங்கள் பல வந்துகொண்டேயிருக்கின்றன. அதாவது சுயமரியாதைச் சத்தியாக்கிரகத்தை உடனே ஆரம்பிக்கவேண்டுமென்றும் தங்களையும் தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்றும் சிலர் கேட்டுக்கொண்டு விண்ணப்பித்திருக்கின்றனர். இத்தியாதி காரணங்களையும் சகோதரர்களின் உணர்ச்சியையும், உற்சாகத்தையும், உறுதியையும், ஆதரவையும் அடிப்படையாகக்கொண்டுதான் பிராமணரல்லாதாரில் சுயமதிப்புள்ளோர் சார்பாக இப்பெரு விண்ணப்பத்தை நான் விடுக்கின்றேன்.

இது சிறு விண்ணப்பமாயில்லாமல்பெரு விண்ணப்பமாயிருப்பதை நண்பர்கள் கூர்ந்துகவனிக்க வேண்டும். பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக நமக்கு அவமதிப்பை பூட்டி, சுயமதிப்பை அகற்றி அடிமைப்படுத்தியிருக்கும் சாதி, சமய, சாத்திர, புராண, வேத கோட்பாடுகளில் உள்ள மூடக்கொள்கைகளை மட்டும் களைந்தெறிய கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும். "எண்ணித் துணிககருமம் துணிந்த பின் எண்ணுவ மென்ப திழுக்கு" குரு குலப்போராட்டம் மாதிரி நமக்கெதிரிடையாய்த் தோன்றும் எத்தனையோ தொல்லைகளையெல்லாம் முன் வைத்த காலை பின் வையாது உறுதியுடன் நின்று தொலைத்து ஒழிக்க வேண்டும். "வீண் வலியும் தன் வலியும் மாற்றான் வலியும், துணைவலியும் தூக்கிச் செயல்" என்றபடி நாம் எல்லாவற்றையும் ஆற அமர ஆராய்ந்தறிந்து பகுத்தறிவுகொண்டு பார்த்து நிதானமாய் இக்காரியத்தை ஆரம்பிக்கவேண்டும்.

நம் சுயமரியாதைக்கு விரோதிகளாயுள்ளவர்கள் எல்லோரும் படித்தவர்களாயும், பணக்காரர்களாயும் இருப்பதால் கோயில், குளம், மடம், சத்திரம், சாவடி போன்ற இடங்களையும், காங்கிரஸ் மகா சபை போன்ற பெரிய ஸ்தாபனங்களையும், கோயில், மான்யம், மடத்துச்சொத்துக்கள், ஸ்தாபன நிதிகள் போன்ற பொருள்களையும், நம்மில் அறியாமையால் கொடிய பழகக வழக்கங்களுக்கு உட்பட்டு மீள வகையறியாமற் கிடந்துழலும் ஏவலர்களையும், வேதம், புராணம், சாத்திரம், ஆகமம், ஸ்மிருதி முதலிய ஆதாரங்களையும், சகல அதிகாரங்களையும் கொண்ட பெரும்பாகமான உத்தியோகங்களையும் கைப்பற்றிக்கொண்டிருப்பதால், இவையனைத்தையும் கொண்டு நம் இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட தீவிரமாய் முயற்சிப்பார்கள். நமக்கோ ஷை சாதனங்களில் ஒன்றும் உதவிக்கில்லாமல் நம் இயக்கத்தை ஆரம்பித்து நடத்தவேண்டியிருக்கிறது. ஆகலால் இவ்வியக்கம்தான் எல்லாவற்றிலும் பேரியக்கமானபடியால் இதைப் பெரிதும் யோசித்தே இந்தப்பெரிய விண்ணப்பம் எழுதியிருக்கின்றேன்.

இவ்வுலகத்தில் புண்ணிய பூமியாக உள்ளதும் பல க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், மூர்த்திகள் நிறைந்ததும், அனாதிகாலந்தொட்டு உள்ள நாகரீகம் வாய்ந்ததும் நல்ல இலக்கண இலக்கியம் நிறைந்ததும், இயற்கை இன்பத்தை ஊட்டும் இனிய தமிழ் பாஷையை உடையதாயும் உள்ள செந்தமிழ் நாட்டிலே ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய மக்கட் பேற்றை அடைந்த நாம், நம் தாய் நாட்டிலேயே நமக்குரிய ஆன்மசுதந்தரம், தேசசுதந்தரம், முத்தி சுதந்தரம், மோக்ஷ சுதந்தரம், கடவுள் சுதந்தரம், சமய சுதந்தரம், சாதி சுதந்தரம் முதலிய ஆரம்ப அத்தியாவசியமான சுதந்தரங்களையெல்லாம் இழந்து கடவுள் பேராலும், சமயப்பேராலும், சாதிப்பேராலும், மோக்ஷப் பேராலும் பிதிர்க்கள் பேராலும் ஏமாற்றக்காரருக்கு அடிமைப்பட்டு, சகோதர பாவமில்லாது, சுயமரியாதையற்ற தன்மையில் ஐயறிவுள்ளவைகளுக்கும் தாழ்மையாய் நடத்தப்பட்டு வாழ்ந்து வருகின்றோம். எலி, பூனை, குரங்கு, நாய், கழுதை போன்றவைகள் உள் கோயிலுக்குள் போகும் தூரம் வரையில்கூட நாம் கட்டிய கோயிலில் நாம் போகக்கூடாதாம். மேற்காட்டிய நாய், கழுதைகள் குளிக்கும், குடிக்கும் தீர்த்தங்களில் கூட நம்மிற் சிலர் குளிக்கவும் கூடாதாம். குடிக்கவும் நீர் எடுக்கவும் கூடாதாம். பொதுச்சாலைகளிலும் அறச்சாலைகளிலும், காப்பி களப்புகளிலும் மேற்படி மிருகங்கள் போய் உள் நுழையவும், உலாவவும் உண்ணவும், பார்க்கவும் கேட்கவும் செய்யலாமாயினும மக்கட் பிறவி யெய்திய நம்மிற் சிலர் அவ்வாறு செய்தால பாவமாம்.

இவ்வாறு நாம் சுயமரியாதையை இழந்துவிட்டபடியால்தான் நம் நாட்டையும் அன்னியர்களிடம் இழக்கும்படி நேரிட்டுவிட்டது. இழந்த நாட்டையும் திரும்ப அடைய முடியாமல் தவிக்க நேரிட்டிருக்கிறது.

நாட்டை ஆட்சி புரிந்த தன்மையெல்லாம் போய் அயல் நாடுகளுக்குப் பந்தக் கூலிகளாகப் போக நேரிட்டிருக்கிறது. ஆதலால் நாம சுயராஜ்யம் பெற்று சுகத்துடன் வாழவேண்டுமென்று விரும்பினால் முதலில் நாம் இழந்த சுயமரியாதையை அடைந்தாலல்லது அது சாத்தியமாகாது. எனவே சுயமரியாதைக்காக நாம் பெருங் கிளர்ச்சிசெய்யவேண்டும். நியாயமான சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் செய்தல் வேண்டும். இதனால் ஏற்படும் சகல வித கஷ்ட நஷ்டங்களுக்கும் தியாகங்களுக்கும் நாம் உட்பட்டு நமது உடல் பொருள் ஆவியெல்லாம் திரிகரண சுத்தியாய் இப்புனித இயக்கத்திற்கு ஈடுபடவேண்டும். படிப்படியாக சிறியதிலிருந்து பெரியதிற்குப் போக வேண்டும். ஆலயப் பிரவேசமும், தீர்த்தங்களும் மிக முக்கியமாயிருந்தபோதிலும் முதலில் நாம் இதில் தலையிடப் போவதில்லை. ஏனெனில் நம்மில் பலருக்கு நம் இயக்கத்தின் கருத்தையும், நோக்கத்தையும எடுத்துக் கூறி பிரசாரம் செய்து அவர்களை நம் வழியில் திருப்ப முயற்சி செய்யாமல் திடீரென்று இதை ஆரம்பித்தால் நம்முடைய சுயமரியாதை எதிரிகளுக்கு இந்தப் பாமரர்களே பக்கத்துணையாய் நின்று நம்மையும் எதிர்த்து தங்களிடம் அடிமைப்படு குழியில் அறியாமையால்வீழ்த்திக்கொள்வார்கள். ஆகலால் இதைத் தற்சாலிகமாக தள்ளிவைத்து விட்டு காப்பி கிளப்புகளிலும் ரயில்வே சிற்றுண்டி விற்கப்படும் ஓடுகின்ற ரயில் வண்டிகளிலும் இன்னும் இதர பொது ஸ்தாபன போஜன சாலைகளிலும் பிராமணரல்ல தாரின் சுயமரியாதைக்குப் பங்கம் வரும்படியான முறையிலும் அவமானத்தை உண்டாக்கும்படியான நிலையிலும் பிராமணரல்லாதாரின் உணர்ச்சியைப் புண்படுத்தி ஆத்திரமூட்டக்கூடிய தோரணையிலும் பிராமணரல்லாதார் தாழ்ந்த ஜாதியார் என்றெண்ணும்படியான தன்மையிலும் பிராமணரல்லாதாரின் சுய மதிப்புத் தியாகத்தினால் பிற ஜாதியார் உயர்ந்தவர்களாகக் கருதப்பட வேண்டும் என்கிற எண்ணத்திலும் செய்யப்பட்ட சகலவித ஏற்பாடுகளையும் நடை முறைகளையும், இட அமைப்புகளிடம் எழுதப்பட்ட எழுத்துக்களையும் உடனே மாற்றவேண்டுமென்று தான் நாம் இப்பொழுது கிளர்ச்சி செய்து அஹிம்சா தர்மத்துடன் சாத்வீகச் சட்ட மறுப்பு தேவையானால் ஆரம்பிக்க முடிவு செய்யவேண்டும். அந்தக்கிளர்ச்சியில் அபிப்பிராய பேதமே இல்லாமல் சகலரும் நம்முடன் அநுதாபம் பாராட்டி ஒத்துழைப்பார்கள். உதாரணமாக "ஐரோப்பியர்களுக்கும் ஆங்கிலோ இந்தியர்களுக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருந்த ரயில் வண்டி இபபொழுது இந்தியர்களின் ஒற்றுமையான கிளர்ச்சியினால் எடுக்கப்பட்டு விட்டதை பார்த்துக்கொள்ளுங்கள். மேலெழுந்த வாரியாய் சிலயோசனைகளை நண்பர்களுக்கு யோசிக்கும்படி கூறுகின்றேன். ஆரம்பத்தில்:—

(1) காப்பி கிளப்புகளில் சாதிபேதமின்றி சகலரும் சகோதர பாவத்துடன் சமத்துவமாய் உள்நுழைந்து உணவருந்துவதை வற்புறுத்துவது

(2) சாதிபேதம், உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும் போர்டுகளையும், எழுத்துக்களையும் நீக்கி விடுதல்

(3) சூத்திரன், பஞ்சமன் ஆதரான் சுதேசி போன்ற இழிமொழிகளை யாரும் உபயோகிக்காமல்இருக்கும்படி சுயமரியாதைப் பிரசாரம் செய்தல்.

(4) சுய மரியாதைக்கும், நியாயமான கிளர்ச்சிக்கும இணங்காத காபபிக் கிளப்புக்களை சாத்வீக வழி நின்று மறியல் செய்து மக்களுக்கு நற்புத்தி கற்பித்தல்.

(5) இவற்றால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக அவசியமிருப்பின் அஞ்சாது சிறை செல்லவும் தயாராய் இருத்தல் முதலியவைகளே. நாம் செய்யப் போகும் காரியங்கள் ஒரு சாதியாருக்கோ அல்லது ஒரு வகுப்பாருக்கோ துவேஷத்தை யுண்டாக்குமென்றாவது அல்லது அவர்களிடம் துவேஷம் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதென்றாவது கருத வேண்டாம். பிராமணியம் அதாவது ஜாதிவேற்றுமை, பிறவியில் உயர்வு தாழ்வு மூடக்கொள்கைகளும் அடியுடன் நம் நாட்டிலிருந்து ஒழியவேண்டுமென்பதுதான் நமது கோரிக்கை. இந்த வித்தியாசம் எந்த சாதியார், எந்த வகுப்பார் வைத்திருக்கும் கிளப்புகளில் இருந்த போதிலும் அவைகளை யெல்லாம் ஒரே மாதிரியாய்த் தாக்குவோம் என்பதை முன் எச்சரிக்கையாகச் சொல்லி விடுகிறேன். இவ் விஷயமாய் நடத்தப்படும் காரியங்கள் எல்லாம் நியாய முறைப்படி பொது ஜனங்களுக்குச் சொல்லி அவர்கள் ஆதரவைப் பெற்று எதிரிகளுக்கு முன் எச்சரிக்கை கொடுத்து அதிலும் கேட்காவிட்டால் நிதானமாய் மேற்காட்டிய பஞ்சதந்திரங்களினாலும் சதுர்வித உபாயங்களினாலும் கிளர்ச்சி ஆரம்பிக்கப் படுமென்பதைச் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# மதங்கள் எதற்குத் தோன்றின? நன்மைசெய்யவா? தீமைசெய்யவா? மதக்கொடுமைகள் ஒழியவேண்டும். மக்கள் பெரிதேயன்றி மதம் பெரிதன்று.

சிதம்பரனார் எழுதியது.

அன்பர்களே! ஒவ்வொரு நாட்டுச் சரிதங்களையும் சிறிது உற்று நோக்குவீர்களாயின் ஒரு உண்மை புலப்படாமற் போகாது ஒவ்வொரு நாட்டிலும் கலகங்களும் கொள்ளைகளும் நடைபெற்றிருக்கின்றன. ஜனங்களும் ஒருவர்க்கொருவர் பெருங்கலகம் விளைத்துக்கொண்டிருந்தார்களென்று அறிகின்றோம். முக்கியமாக மக்களுக்குள் கலகம் நேருவதற்குக் காரணமாக விருந்தது, மக்கள் மதத்திற்கொண்டிருந்த குருட்டு நம்பிக்கையே யென்பது நமது அபிப்பிராயம். மதத்தில் அன்புகொண்டிருக்கும் பித்தர்தலைக்கேறிய நண்பர்கள் நான் சொல்லுவதைச் சிறிது பொறுமையுடன் கேட்கவிரும்புகிறேன். இதுகொண்டு, நான் மதமே வேண்டாமென்று வெறுப்பதாக நண்பர்கள் தவறாக எண்ணிவிடுதல் கூடாது. மதப்பற்றென்பது தன்னளவிலே போற்றக் கூடியதாக விருக்கவேண்டுமன்றிப் பிறர் கொண்டிருக்கும் மதத்தில் அருவருப்பும் வெறுப்பும் கொள்ளக்கூடிய நிலையிலிருத்தல் கூடாதென்பதே நமது கொள்கை யென்பதை நண்பர்கள் நினைவில் வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

ஐரோப்பாவில், கிரீக்கும் கலியமேனாட்டு சரிதங்களிற் காணக்கிடக்கும் சண்டைகளிற் பல மதத்தின் பேரால் நடைபெற்றிருப்பதைப் பார்க்கலாம். நமது இந்து தேசத்தைப் பாருங்கள். பெரும்பாலும், சண்டைகளும், கொள்ளைகளும், கொலைகளும் மதத்தின் பேரால் நடைபெற்றிருக்கின்றனவன்றோ?

இறைவன் அருள்பெற்ற பெரியோர்களாக—சமய ஆசிரியர்களாகக் கொண்டாடப்படும் பெரியோர்களும், மதத்தின் பேரால் பிற மக்களுக்குத் தீங்குகள் பல செய்தனரென்றால் அந்தோ! மதப் பேயின் ஆற்றலை என்னென்று கூறுவோம்!

மதத்திற்கெனக் கூறப்பட்ட பண்டைய நூல்களை ஆராய்வோமாயின், அவைகள் மக்களுக்குத் தீங்கு பயக்கக்கூடியன அல்லவென்பதை அறியலாம். பண்டைய மத நூல்கள் அனைத்தும் மக்களுக்குள் அன்பையும், சகோதரத்துவத்தையும், தேசவூழியத்தையும் போதிக்கின்றன வென்பதை உண்மையாராய்ச்சி யுடையவர்கள் நன்கறிவார்கள். ஆனால் தற்காலத்தினர் தான் மதப் பைத்தியம் மேலிட்டவர்களாய், பிற மதத்தைத் தூஷித்துத் தம்மதத்தை உயர்த்துவதற்கான பல நூல்களை எழுதிவைத்து நாட்டைப் பாழாக்கினர். அந்நூல்களைப் பயின்றவர்கள் பலரும், தம் மதத்தைப் போற்றுவதோடின்றிப் பிறமதத்தைத் தூற்றுவதிலேயே காலங் கடத்துவாரயினர். இன்றேல் பண்டைக் காலத்தில் மக்களுக்குள் ளிருந்த ஒற்றுமைத் தன்மை குறைவதற்கு

[illegible] ...பிற்று. இவ்வுண்மை எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதென்னும் எனது அபிப்பிராயம் தவறாகாதென நினைக்கின்றேன்.

பண்டைக்கால மதநூல்களாகிய திருக்குறள், பைபிள், குரான் முதலிய நூல்களைப் பாருங்கள்! இவற்றில் எங்கேனும் பிற மதங்களை இகழ்ந்து கூறியிருக்கின்றதா? இல்லையன்றோ? இவைகளுக்குப் பின்னர்த் தோன்றிய அந்தந்த நாட்டு மதநூல்களும், வழிநூல்களும், பெரும்பாலும் பிற மதத்தை வெறுத்துத் தம்மதத்தை நிலைநாட்டுவதற்கே பெரிதும் முயல்கின்றன.

நாகரீகம்பெற்ற காலமென்று கூறப்படும் இக்காலத்திலும், மதக் கொடுமைகளும் கொள்ளைகளும் நமது உலகத்தை விட்டு அகன்றபாடில்லை. அதிலும் அக்கொடுமைகள் நமது தாய்நாட்டிலேயே மிகுதியாக நடைபெறுவதை நாம் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிற் கண்டு மனம் வருந்தக் கூடிய நிலையிலிருக்கின்றோம். அக்கொடுமைகளையொழித்து மக்களுக்குள் சமரசத்தை உண்டாக்குவதற்கென்று இடைக்காலத்தில் பல மதங்கள் தோன்றின. அவற்றாலாவது இக்கொடுமைகள் ஒழிந்தனவாவென்றால் ஒரு சிறிதும் இல்லை. இன்னும் கொஞ்சம் சண்டைகள் அதிகப்பட்டனவென்றே துணிந்து கூறலாம்.

உதாரணமாக ஆரிய சமாஜத்தையும், பிரம்ம சமாஜத்தையும் எடுத்துக் கொள்வோம். இதில் பிரம்மஞான சங்கமும் ஒன்றாகும். ஆனால் பிரம்மஞான சங்கத்தால் சிறிது சமரச உணர்ச்சி உண்டாயிற்றென்று கூறலாமென்றெண்ணுகிறேன். ஆரியசமாஜம் தோன்றிய நாள் முதல் வடஇந்தியாவில் இந்துமுஸ்லீம் கலகம் வலுத்துக்கொண்டேயிருந்தது. போதும் போதாததற்கு "எரியும் நெருப்பில் மண்ணெண்ணையை ஊற்றியது போல்" சுத்தி இயக்கம் புறப்பட்டு விட்டது. இந்து முஸ்லீம கலகம் பெருகிற்று. தேசிய வாதிகள் பலரும் சமரசப் படுத்த எவ்வளவோ முயன்றும் பயனின்றியொழிந்தது. குழந்தையைக் கிள்ளி விட்டுத் தாலாட்டுவது போலச் சில தேசிய வாதிகள இந்து முஸ்லீம் ஒற்றுமையை வாயினாற் பேசிவிட்டு இந்துக்களைக் கிளப்பி விடுவதும, முஸ்லீமகளைக் கிளப்பி விடுவதுமாக இருக்கின்றனர். அந்தோ! இத்தகைய செயல் என்று நம் நாட்டை விட்டகலுமோ அறியேம்.

ஆகவே எந்த வகையிலும் மதக் கொடுமைகளும மூட நம்பிக்கைகளும நம்நாட்டை விட்டகன்றால் தான் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் நிலவுமென்ற உண்மை இப்பொழுது சில தலைவர்கள் மனதில் உதித்திருப்பது கண்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த நிலையில் அரசாங்கத்தார் நாங்கள் மதத்தில் தலையிடமாட்டோமென்ற பழய வாய் வேதாந்தத்தைப் பாடிக்கொண்டிருப்பதால் ஒருபயனுமில்லை. அவர்களும மக்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்கத்தக்க சமூக ஊழியத்திற்கு ஆதரவு புரியவேண்டும்.

மற்றொரு முக்கியமான செய்தி குறிப்பிடத்தக்கதாகும். மக்கட் சமூகத்தின் ஒற்றுமைக்கும் சுயமரியாதை வளர்ச்சிக்கும் தீங்கு பயக்கக்கூடிய கொள்கை எந்த மதத்தின் பேராலிருந்தாலும் அதனைப் பாவவொட்டாமற்றடுப்பது அரசாங்கத்தாரின் கடமையும், நாட்டுத் தலைவர்களின் கடமையுமாகும். அதற்குத் தகுந்த உரிமையையும் பாதுகாப்பையும், அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் சமூக ஊழியத்தொண்டர்களுக்களிக்கவேண்டும்.

தென்னாட்டில் பிராமணீயம் மக்களை வாட்டிக் கொண்டிருக்கின்றது. எல்லோருக்கும் பொதுவான கடவுளை வணங்குவதிலும் தங்கள் தங்களுக்குச்சரிய சுக துக்கச் செயல்களைச் செய்துகொள்வதிலும் எல்லா மக்களுக்கும் உரிமை யில்லை! பார்ப்பனீயம் இதன மூலமாக் மக்கள் உரிமையையும், சுயமரியாதையையும் விழுங்கிக்கொண்டிருக்கின்றது. பார்ப்பனீயம் மக்களின் இயற்கையான உரிமையை விழுங்கிச் சில மக்களுக்குப் பல மக்களை அடிமையாக்கி நிற்கின்றது. அடிமைப்பட்ட மக்களை மிருகத்தினும் கேவலமாக அறிவுடைய மக்கள் நினைத்து நடத்தும் படி பாழும் பார்ப்பனீயம செய்து விட்டது. ஆகவே இத்தகைய கொடிய—மக்களை அடிமைப்படுத்தும்—ஒரு சிலரின் சுயநலத்திற்காகத் தோன்றிய—சுயமரியாதையைக் கெடுக்கும்—காட்டு மிராண்டித்தனமான—அநாகரீகமான் மதக் கொள்கைகளை நாட்டை விட்டு அகற்றி மக்களனைவரையும் "குலமும் ஒன்றே கொள்கையும் ஒன்றே, வழிபடு தெய்வமும் ஒன்றே" என்ற கொள்கையிலீடுபட்டுச் சுயமரியாதையுடன் வாழுமாறு செய்வது உண்மைத் தேசாபிமானிகளுடைய கடமையும், ஜன சமூக ஊழியர்களுடை கடமையும், அரசாங்கத்தாருடைய கடமையுமாகும் என்பதை நினைப்பூட்டுகின்றோம்.

## பிராமணீய மொழிந்த திருமணமும் நன்கொடையும்.

நாகப்பட்டணம, காலஞ் சென்ற தலைவர் வெ. ப. பக்கிரிசாமி பிள்ளை அவர்களின் ஸ்வீகாரப் புதல்வரும தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகளின் மெம்பருமான திருவாளர் வெ. ப. [illegible]யரோகணம் பிள்ளை அவர்களின்சகோதரருமான திரு நடராஜ பிள்ளை அவர்களுக்கு இன்று 9—9—27 வெள்ளிக்கிழமை காலை 4-மணிக்குபார்ப்பனரல்லாத குருக்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. மேடி கல்யாணத்தின் ஞாபகார்த்தமாக பார்ப்பனரல்லாதார் விடுதலைக்கு உழைக்கும் ஜஸ்டிஸ், திராவிடன பத்திரிகைகளுக்கு ரூ. 3 மூன்றும், குடி அரசு பத்திரிகைக்கு ரூ. 2 இரண்டும் நன்கொடை அளித்துள்ளார்கள் மணமக்கள் நீடுழி வாழ இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஆளப்பவரைவிட அடிமைப்படுத்துபவர் அபாக்கியர்.

## சுயமரியாதை.

(அரு. சோமசுந்தரன்)

பார்ப்பனக் கொடுமைகள் நாட்டில் மிகுதியும் அதிகரிக்கின்றன. பழக்கமாக வந்துவிட்டபடியாலும், பார்ப்பனரல்லாதாரிற் பலர் பிராமண பக்தராகவும், அவ்வுணர்வுடையவராகவும் இருக்கின்றபடியாலும் அக்கொடுமைகள் நியாயமானவை என்று கருதப் பெறுகின்றன. பகுத்தறிவுடனும், பார்ப்பனரல்லாதார் உணர்வுடனும் ஆராய்ந்து பார்த்தால் யாவருக்கும் அக்கொடுமைகள் தெளிவாகப் புலப்படும். பார்ப்பனர் ஒவ்வொரு காரியத்திலும் பார்ப்பனரல்லாதார்க்கு இழிவைச் செய்து கொண்டே வருகின்றனர். வீட்டு விசேஷங்களில் பார்ப்பனரல்லாதார் வேத மந்திரம் சொன்னால் தீட்டாய்ப் போய்விடுமென்று அமரம் எனும் நிகண்டினை ஓதுகின்றனர். அப்பர் சுவாமி சூத்திர அடியாரென்று அவருக்குப்பின் வேதம் ஓத மறுக்கின்றனர், ஓதினால் தோஷமாம். கோவிலில் தேவாரம் பாடிய பின்னர் விபூதி கொடுப்பதே முறையென்று விவாதித்தால், சூத்திர மொழிக்குப் பின் பிரசாதம் நாங்கள் பெற மாட்டோமென்கின்றனர் சந்யாசிகளிற் கூடச் சூத்திர சந்யாசி என்று பிரிவு செய்து சூத்திரசந்யாசிகளைக் கேவலஞ் செய்கின்றனர். பிராமண சந்யாசிகள் சூத்திர சந்யாசிகளுடன் சாப்பிட மாட்டோமென்கின்றனர். ஒரு சங்கராச்சாரியார் காலையில் தமிழில் பேசின் பூஜைக்குத் தீட்டு வந்து விடுமென்கிறார். எனவே, அவர் சமஸ்கிருதத்தில் பேச, ஒரு தாகர் மொழி பெயர்க்கிறார். இதன் பொருளென்ன? பூஜா காலத்தில் சூத்திர மொழியும் சூத்திரரும் கூடாதென்பதினாலன்றோ? சங்கராச்சாரியார் நடத்தும் பிராமண சந்தர்ப்பணையிலும், பிற அன்ன சத்திரங்களிலும் மடங்களிலும் பார்ப்பனரல்லாதாருக்கு அன்னமளிக்க மறுக்கின்றனர். கோயில்களில் பலவகையான சுயமரியாதையற்ற காரியங்களைச் செய்கின்றனர். பார்ப்பனரல்லாதாரை "விலகு, விலகு" என்று கூறி ஒதுங்கச் சொல்லுகின்றனர். குலம் கோத்திரம் விசாரித்துக் கொண்டே மலையாளத்திலுள்ள கோயில்களில் நுழைய விடுகின்றனர். சில கோயில்களில் கடல் கடந்தவர், சிறை சென்றவர் நுழையக் கூடாதென்கின்றனர். கன்னியாகுமரியில் காந்தியடிகளைக் கோயிலுக்குள் விட மறுத்துவிட்டனர். இறைவனும் பார்ப்பன நீர்மையினன் என்று தரகராகிய தங்கள் மூலம் கொடுத்தாலொழிய எதையும் அவன் ஏற்றுக்கொள்ளான் என்கின்றனர். பிதுரரும் தரகராகிய பார்ப்பனர் மூலமே பெற்றுக் கொள்வர் என்கின்றனர்.—பிதுரரும் தரகராகிய பார்ப்பனர் மூலமே பெற்றுக்கொள்வர் என்கின்றனர். பார்ப்பனரல்லாதாருக்கும், இறைவன், வேதம், பிதுரர் முதலியவற்றிற்கும் தொடர்பில்லையென்று கருதுகின்றனர். பார்ப்பனரல்லாதார் பாவத்தைப் பார்ப்பனரே கழுவும் ஆற்றலுடையார் என்று பணத்தைக் கொள்ளை கொள்ளுகின்றனர். திதி முதலிய சில விசேடங்களில் மண்டியிடும்படியும், தம்மைப் பிரதக்ஷணஞ் செய்யும்படியும், கைகட்டி வாய்பொத்தித் தீர்த்தப் புரோக்ஷிணையைப் பெற்றுக்கொள்ளும்படியும் சுயமரியாதையற்ற தன்மையில் பார்ப்பனரல்லாதாரை நடத்துகின்றனர். இவைகளைப் பழக்கமாக யாவரும் செய்து கொண்டு வருகின்றார்களேயொழிய, ஒருவரும் சுயமரியாதை உணர்வைப் பெறுவதில்லை.

வண்ணான் கொண்டுவரும் வேஷ்டியைக் கூடத் தொட்டால் தீட்டு வந்துவிடும் என்று வைதிகர் கம்பால் தூக்குகின்றனர். பொதுத் தண்ணீர்ப்பந்தர்களிற்கூடப் பார்ப்பனருக்குத் தண்ணீரும் லோட்டாவும் வேறாகவும் அல்லாதார்க்கு வேறாகவும் வைத்திருக்கின்றனர். சில தண்ணீர் பந்தல்களில் சில ஜாதியார்க்குக் குழாயின் வழியே தண்ணீர் ஊற்றப்படுகிறது. இது கண்டிக்கத்தக்கதாகும். யாவர்க்கும் லோட்டாக்களில் கொடுப்பதே மேலானதாகும். பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரைப் பொதுவாகச் சுயமரியாதையுள்ள மனிதராகவே பாவிப்பதில்லை. ரயில் வண்டிகளில் கூடப் பார்ப்பனர் அமர்ந்திருக்கும் பெஞ்சுகளில் பிறர் அமரக்கூடாதென்கின்றனர் ரெயில்வே சாப்பாட்டுப் பொது விடுதிகளிலும் தங்குமிடங்களாகிய சத்திரங்களாகியவற்றிலும் கூடத் தங்களுக்கெனத் தனியிடம் வேண்டுமென்று அமைக்குமாறு செய்து வைத்திருக்கின்றனர். பார்ப்பனரல்லாதாரைத் தமக்குச் சமமானவர்களல்லர் என்றும், மிகத் தாழ்ந்தவர்களென்றும் கருதி அவர்கள் நீண்ட நாட்களாக நமது சுயமரியாதை பெறுதவண்ணம் செய்து வந்திருக்கின்றனர்; வருகின்றனர். பார்ப்பனர் ஒரு குலத்துக்கு ஒரு நீதியாக எழுதிவைத்துள்ள புரட்டு நூல்களில் பார்ப்பனருக்குக் கொடுப்பதே புண்ணியம் என்றும் எழுதிவைத்து ஏமாற்றி வருகின்றனர், வறுமையால் வாடும் ஏழைகளுக்கு ஈதல் வேண்டும் என்று எழுதிவைத்திருந்தால் ஒருவாறு ஒழுங்காகும். எல்லா இடங்களிலும் தங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று எழுதி வைத்திருப்பது சுய நலமே. பார்ப்பன மதாச்சாரியர் தம்மைக் கடவுளினும் அதிகமாகவே கருதியிருக்கிறார். கோயில்களில் அவர் வரும்பொழுது பாதரக்ஷையுடனேயே வருகின்றார். கோயில் பிராகாரத்தில் கக்கூஸ் முதலியவற்றைக்கூடச் சில இடங்களில் முன்னர் அமைத்துக்கொண்டிருக்கிறார். அவர் யாண்டும் சுற்றுப்பிரயாணஞ் செய்து பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குத் தடையாக வேலை செய்கின்றார் பார்ப்பனரல்லாதார் சிலர் சுயமரியாதையற்ற முறையில் அவர் பல்லக்கைச் சில இடங்களில் தாங்கி வருவது வருந்தத்தக்கதே. "ஒரு ஜாதியாரே உயர்ந்தவர்கள், மற்ற ஜாதியார் அனைவரும் தாழ்ந்தவர்கள். அவ்வொரு ஜாதியாருக்கு மற்றவரனைவரும் அடிமைப்பட்டிருத்தல் வேண்டும்" என்று கூறிவரும் ஒருவரை எவ்வாறு லோககுரு என்று கூறுவது? அவர் செய்கை, உதவியாவும் பார்ப்பனமயமாகவே இருத்தலால் அவரைப் பார்ப்பன் குரு என்று அழைத்தலே பொருத்தமுடையதாகும். பார்ப்பனரல்லாதாரை தாழ்வாகப் பேசும் அவருக்கும் அவரைச் சுற்றியுள்ள பிராமணருக்கும் பிக்ஷை செய்தல் பாவமேயாகும். பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை பெறுதவகையில் தாழ்மையாக நடத்துவதில் பேர்போனவர் சங்கராச்சாரியாரே. பார்ப்பனர் வீட்டிற்கு அவர் செல்கிறார். ஆனால் பார்ப்பனரல்லாதார் வீட்டுக்கு அவர் வருவதில்லை. இவ்வாறு அவர் பார்ப்பனரல்லாதாரைப் பெரிதும் அவமதிக்கிறார். ஆனால் அல்லாதாரிடம் பணம் வசூல் செய்வதில் மாத்திரம் அவர் பின்வாங்குவதில்லை. இப்பொழுது பிராமணக்கொடுமைகளை ஒழிக்கவேண்டுமென்று கூறுவதெல்லாம் நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்கேயாகும். மேலும் பார்ப்பனரல்லாதார் சமூக விடுதலை சமய விடுதலை பெறவும் சுகமான வழியில் வீண் செலவைக் குறைத்துச் செட்டான முறையில் வாழவேண்டுமானால் அர்த்தமற்ற பார்ப்பனச் சடங்குகள் அனைத்தையும் ஒழிக்கத்தான் வேண்டும் பிராமணருக்கு எப்பொழுதும் கொடுத்தல் என்பது கட்டாயவரியாக வந்துவிட்டபடியால் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டநஷ்டங்கள் சொல்லி முடியாது. பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் பெறுதல் வேண்டுமானால் பார்ப்பனக்கொடுமைகளை ஒழித்துத்தான் தீரவேண்டும். பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை பெற்றுச் செழித்தோங்குதல் வேண்டுமானால் பார்ப்பனர்கள் உயர்ந்தவர் என்று எண்ணுதலையும் வந்தனை வழிபாடு செய்து வரி செலுத்துதலையும் அறவே விட்டொழித்தல் வேண்டும். எல்லா விஷயங்களையும் தமது சொந்த மதிகொண்டு உணர்ச்சியுடன் பார்ப்பனரல்லாத நண்பர்கள் ஆலோசிப்பார்களானால் உண்மை இனிது விளங்கும்.

"குமா

## தாழ்ந்த வகுப்பினரும் தண்ணீருக்குக் கண்ணீரும்

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூக்கா கட்டுக்குடிபட்டியென்னும் கிராமத்தில் தாழ்ந்த வகுப்பாரென்று உண்மையுணராப் பேதை மக்களால் தள்ளப்பட்டிருக்கும் பள்ள நண்பர்கள் நாற்றமுள்ள தண்ணீரை விடுத்து நல்ல தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு ஊரிலுள்ள மற்ற வகுப்பினர்கள் வீதி வழிச்செல்லவிடாது மிகவும் கொடுமையாகவும் முரட்டுத் தனமாகவும் தடை செய்தனர். அதுபற்றி தாழ்ந்த வகுப்பினர் சுமார் 30 வீட்டுக்காரர்கள் நமது அரசாங்க நீதிமன்றங்களுக்கு ஒரு மாதத்திற்குமுன் இருமுறை மனுக்களெழுதியிருந்தும் இதுநாள் வரை ஒருவித நன்மையும் கிடைக்கவில்லையே யென்று மிகவும் வருந்துகின்றனர். அன்பர்காள்! நமது அரசாங்க நீதி மன்றங்களில் உயர்தர அலுவல்களில் அமர்ந்திருக்கும் தலைவர்கள் நீதிபதிகள் இனியேனும் சிறிது கவனிப்பார்களென அன்புடனும் வணக்கத்துடனும் எதிர்பார்க்கின்றோம் என்று திரு. ராம. சொக்கலிங்கம் பிள்ளை எழுதுகிறார்.

## திருவரங்கம் பிள்ளை திருமணம்.

ஒரு பொறுப்புள்ளவர் எழுதுவது.

இத்திருமணம் திருமயிலைச் சிவபிரான் கோயிலில் நிகழுங்காலை ஆதி சைவக் குருக்கள் திருமங்கல நாணைச் சிவலிங்கப் பெருமான் திருவடியில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து மணமகன் கையில் கொடுத்ததை பார்ப்பன சம்பந்தமென்று 'தமிழ்நாடு' 'திராவிடன்' 'குடியரசு' முதலிய பத்திரிகைகள் கருதுவதாகத் தெரிகிறது. சிவலிங்கப் பெருமான் திருவடியில் திருமங்கல நாணினை நேரே எடுத்துக் கொள்ளாது ஆதி சைவக் குருக்களை அதற்காக பயன் படுத்தியது ஓர் குற்றம் போலும்,

பண்டை நூலாராய்ச்சியால் தமிழர்க்கே கோயில்களுரியன வென்றும் ஆதிசைவக் குருக்கள் தமிழரின் ஒரு பகுதியாரே யென்றும் கருதிய மறை மலையடிகள் ஆதிசைவரோடு தாம் பழகிய அளவில் அவர்களுள் தக்க அறிஞர் பலர், வேற்றுமை ஒழித்துத் தம்மோடு அளவளாவி உடன் கலந்து பணிவிடை செய்யக்கண்டு அன்னாரைத் தமிழரோடு ஒன்று படுத்தலாமென்ற நம்பிக்கையால் மயிலைத் திருக் கோயிலிற் பூசனைபுரியும் தமது ஆதி சைவ மாணவரை தமது புதல்வித் திருமணத்தில் போது ஓர் கருவியாகப் பயன்படுத்தினரென்க.

ஆதி சைவரை அடிகளும் பிற சிலரும் தமிழ் வேளாளரென்றே கருதினமையாலும் அவர்களைத் திருந்திப் பிரமணரல்லாத மக்களோடு சேர்த்துக் கொள்ளுதல் இயலவதொன்றென்றே நம்பினமையாலும் அது நிகழ்ந்தது.

நம்மவர் மணங்களை நம்மவர் வாயிலாகவே நடத்த வேண்டுமென்ற கருத்துக்கொண்ட திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை முதலியவர்கள் திருமங்கல நாண் பூட்டுஞ் சமயத்திலே தான் நெல்லையிலிருந்து வந்து இதனைக் கண்ணுற்றமையால் மறைமலையடிகளுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கச் சமயம் வாய்க்கப் பெற்றிலர்.

ஆதிசைவ மரபினர் தமிழருடன் மனமியைந்து சேருவார்கள் என்பதற்கும் போதிய சான்றுகள் காணும் வரை இத்தவறு பிறதிருமணங்களிலும் நிகழ வொட்டாது செய்வது தமது கடமையென்று திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை முதலியவர்கள் உணருகின்றார்கள்.

தமிழ் மக்கள் திருக்கோவிலில் திருமணம் நடத்துதல் பண்டும் இன்றும் என்றுமுள்ள வழக்கமாகும் காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் கோயிலில் பங்குனி உத்திர விழாவில் நடைபெறும் பெருமான் திருமணக்காலத்தே பல நூற்றுக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் கூடி யாதொரு சடங்குமின்றி ஒவ்வொரு மணமகனும் இறைவனை வழிபட்டு பெருமான் மணம் நடைபெறுஞ் சமயம் தனது மணமகட்குத் திருமங்கல நாண் பூட்டுதல் இன்றும் காணப்படும் பெரு நிகழ்ச்சியாகும்.

அக்காலத்தில் ஆண்டவன் சந்நிதியில திருமணம் முடித்துக் கொண்ட பலரும் யாதொரு குறைவு மின்றிப் பொருளும் போகமும் நன் மக்கட் பேறும் பெற்று இனிது வாழ்கின்றனர். இது போலவே குளித்தலைத் தாலூகாவிலுள்ள குணசீலமென்னும் தலத்திலுள்ள ஆலயத்திலும் திருநாகேச்சுரத்தின் பக்கத்திலுள்ள உப்பிலியப்பன் கோயில் முதலிய தலங்களிலும் இவ்வாறு திருமணம் நடைபெறுகிறதாகையால் நம்மவரிற் சிலர் திருக்கோவிலில் திருமணம் நடத்துவது தவறென்று கருதுவது பிழைபாகும்.

திருக்கோயிலில் திருமணஞ் செய்தலே, இடைக்காலத்தில் ஏற்பட்ட பயனில் சடங்குகளும் வீண் செலவுகளும் வீண் செலவுகளினால் ஏற்படும் பொருட்கேடு மனக்கலக்கம் முதலிய யாவும் ஒழிந்து மணமகனும் மணமகளும் கவலையின்றிச் செவ்விதின் வாழ்க்கை இன்பம் துய்ப்பதற்குச் சிறந்ததோர் நல்வாயிலா மென்க.

திருமயிலையிற் திருமணம் நடத்திய தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சர் திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் அவர்கள் இன்னுயிர்த் துணைவியாகிய திருமகள் நீலாம்பிகையம்மையவர்களும் நீடுவாழ இறைவன் திருவருளை வழுத்துகிறோம். "கண்டுகளித்தோன்."

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சம்மதத்தின் பேரிலேயே இது பிரசுரிக்கப்பட்டது. எனவே இது விஷயம் இத்துடன் முடிவு பெறுகிறது.

## கோயமுத்தூர் விவசாயக் கல்லூரி

கோயமுத்தூர் அக்ரிகல்ச்சரல் காலேஜ் என்னும் விவசாயக் கல்லூரியையும் அதன் ஆராய்ச்சி ஸ்தாபனத்தையும் மேல்பார்வை பார்க்க அநேக கனவான்களை சர்க்காரால் நிச்சயித்திருக்கிறார்கள். அக்கூட்டத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் விவசாய விஷயத்திற்கு உழைத்து வருபவரும், திருப்பூர் விவசாயக்காக்ஷி முதலியவற்றிற்கு முக்கியஸ்தரும், விவசாய சங்க காரிய தரிசியும், கோயமுத்தூர் சேலம் ஜில்லாவில் பெரும் விவசாயமுள்ளவருமான ஸ்ரீமான் V. C. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களை நியமிக்கவே இல்லை. ஆனால் நெல்லு காய்க்கிற மரம் எங்கே இருக்கிறதென்று கேட்பவரும் துணி காய்க்கிற செடி எங்கே இருக்கிறதென்று கேட்பவரும் அவைகளைத் தெரியவேண்டிய அவசியமில்லாதவரானவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எதற்கும் நமது சர்க்காருக்கு சிபார்சும் தயவும் இருந்தால் தான் முடியும். யோக்கியதையைப்பற்றிய கவலை கிடையாது.

## மகாத்மாவுக்கு முதலியாரின் நற்சாக்ஷி பத்திரம்

ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் மகாத்மா காந்திக்கு ஒரு நற்சாக்ஷி பத்திரம் வழங்கினார். அதாவது மகாத்மா தன்னைப்பற்றி ஞாபகம் வைத்திருக்கிறாராம். 5, 6 வருஷகளுமுன் தான் மகாத்மாவின் பிரசங்கத்தை மொழிபெயர்த்தது மகாத்மாவுக்கு இன்னும் ஞாபகத்திலிருக்கிறதாம். அதனாலேயே மகாத்மாவுக்கு நல்ல ஞாபகக் குறிப்பு இருக்கிறதாம்.

ஆனால் அதே மகாத்மா ஒருசமயம் சென்னைக்கு வந்த காலத்தில் ஸ்ரீமான் சர். தியாகராயர் வீட்டில் இறங்கி கொஞ்சநாள் தங்கியும் இருந்துவிட்டு போனபிறகு ஒரு விஷயத்தில் சர். தியாகராயரைப் பற்றி மகாத்மாவை கேட்டபோது தமக்கு அவரைப் பற்றி தெரியாது என்று சொல்லிவிட்டாராம். கொஞ்சநேரம் பிரசங்கம் மொழிபெயர்த்ததைப்பற்றி ஞாபகத்தில்வைத்திருந்த மகாத்மாவுக்கு தாம் இறங்கி கொஞ்சநாள் இருந்தவர் ஞாபகத்திற்கு வராமல்போனது என்ன காரணமோ என்பதை ஸ்ரீமான் முதலியார்தான் சொல்லவேண்டும், மகாத்மாவுக்கு ஞாபக சக்தி அதிகம் என்று தீர்மானிப்பதானால் பார்ப்பனரின் அடக்குமுறை சக்தி அதைவிட அதிகமென்றுதான் தீர்மானிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்ரீமான் முதலியாரிடம் மாத்திரம் அதிக ஞாபகம் என்று சொல்லவேண்டும்.

## காந்தியைக் காட்டி காசுபறித்தல்.

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் மகாத்மாவைக்காட்டி காசு பறிக்கிறார்கள் என்று பொதுவாய் எழுதி வந்தோம். இப்போது அது வாஸ்தவமாகவே நடைபெற்றுவிட்டது. அதாவது திருச்சியில் ஒரு கொட்டகையில் மகாத்மாவைக் கொண்டுபோய் வைத்து பார்க்க வருகிறவர்களிடம் டிக்கட்டு போட்டு பணம் வசூல் செய்கிறதாக சங்கதி எட்டுகிறது.

மேடை ரூ. 25-க்கு மேல், ரிசர்வெட் ரூ. 15 முதல் 25 வரை, முதல் வகுப்பு ரூ. 10 முதல் 15 வரை, இரண்டாவது வகுப்பு ரூ. 5 முதல் 10 வரை, மூன்றும் வகுப்பு ரூ. 2 முதல் 5 வரை என்பதாகவும்,

டிக்கட்டுகள் சாஸ்திரி & கம்பெனியிலும் வைத்தியா & கம்பெனியிலும் கிடைக்கும் என்பதாகவும் திருச்சி டாக்டர் ராஜனால் துண்டு நோட்டீசு வினியோகிக்கப்பட்டது நமதுபார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மகாத்மாவின் பிரசங்கமும அவர் தரிசனமும் அவர் தாம ப்பதும் சங்கராசாரி போடும் வரிக்கு மேல் போய்விட்டது. அது செலவாவதும் சங்கராசாரி செலவு செய்வது போலவே பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாகப போய் விட்டது. நாம் மூடர்களாயிருக்கும் வரை நமக்கு சுயமரியாதை வரும் வரை இது நடந்து கொண்டு தான் இருக்கும். இதற்கு யார் என்ன செய்வது?

## பார்ப்பனியமொழிந்த திதி.

சோளவந்தானுக்கடுத்த மன்னாடிமங்கலத்தில் திரு பரமசாமி பிள்ளை அவர்கள் குமாரர் லோகல்பண்டு கண்டிராக்டர் திரு ராமசாமி பிள்ளையவர்கள் தம்முடைய பிதாவின் சிராத்தத்தை சுய வைதீகக்குருக்களைக்கொண்டு 24உ நடத்தி திருப்தியடைந்தார்கள் என்று பி. முத்துக்கருப்பண பிள்ளை எழுதுகிறார்.

# வக்கீல் வாய்தா வாங்கும் தந்திரம்.

## வக்கீலுக்கும் கக்ஷிக்காரனுக்கும் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன் எழுதியது).

ஒரு வக்கீல் வீட்டுக்கு
ஒரு கக்ஷிக்காரன் வருகிறன்.

வக்கீல்:—வா கவுண்டா, என்ன சங்கதி.

கக்ஷிக்காரன்:—எசமான்று கிட்டதான் ஒரு காரியமாய் வந்தேன்.

வ:—என்ன காரியம்.

க:—நான் ஒருத்தருக்கு 1000 ரூபாயும் வட்டியும் கொடுக்கவேண்டும். வாங்கி 2 வருசமாச்சிங்கோ. வாய்தா சொல்லி கடந்தும் ஒரு வருசமாச்சிங்கோ. கடைசியாக 2 மாச வாய்தா கேட்டேன். அதுக்குள்ளே பிராது போட்டுட்டானுங்கோ. எசமான்று எப்படியாவது ஒரு இரண்டு மாச வாய்தா வாங்கி கொடுத்தாக்க பணம் கட்டிப்போட ரனுங்கோ.

வ:—இரண்டு மாதம் தானு, இரண்டு வருஷ வாய்தா வாங்கிக்கொடுக்கிறேன். கடைசியாய் அவன் உன்னிடம் பணம்வாங்குகிறதையே நான் பார்த்து விடுகிறேன்.

க:—சாமி சாமி அப்படிச் செய்யாதிங்கோ, அவன் மொதுலுக்கு காணு பிள்ளை, எம மொதுலே எத்தனையோ பேர் திங்கிராங்கோ இரண்டு மாசம் இல்லாட்டா மூணு மாச வாய்தா கிடைத்தால் போரும்.

வ:—சரி பீசு என்ன கொடுக்கிறே.

க:—எசமாங்க சொன்னுச்சரி.

வ:—ஐம்பது ரூபாய் கொடுக்கணும் வாய்தா வாங்குகிறது என்றால் விளையாட்டு காரியமல்ல.

க:—25 ரூ. தாரனுங்கோ.

வ:—வாய்தா வாங்குவதில் உள்ள கஷ்டம் உனக்கு தெரியாது நான் செய்யும் வேலையினுல் முனிசிப்பே 1 வருஷம், 2 வருஷம் வாய்தா கொடுத்தாலும் கொடுப்பார். ஆனதால் பீசு 50-க்கு குறையாது.

க:—அத்தனை நாள் வாய்தா வாண்டாம் 2, 3 மாசம் கிடைச்சால் போதும்.

வ:—நீ என்ன பயித்தியகாரனுக இருக்கிறாய்? கடன் கொடுத்தவன் 2 மாதம் வாய்தாக் கேட்டதற்கு கொடுக்காமல் பிராது போடுவதென்றால் அவனுக்கு அத்தனை ஆணுவமா அவனை விடக்கூடாது. பீசைப் பற்றி நீ கவலைப்படாதே நான் வாங்கும் வாய்தாவினுல் உனக்கு மிச்சமாகும வட்டியைக் கொடுத்தால் போதும்.

க:—அப்படியானுல் எசமாங்கோ கேக்கிரபடி தாரேனுங்க இந்தாங்கோ இப்ப 25 ரூ. வாங்கிக்கோங்க.

வ:—சரி என்று குமாஸ்தாவை கூப்பிடுகிறார். ராமச்சந்திரா.

குமாஸ்தா:—சார்.

வ:—இவனிடம் ஒரு வக்காலத்து வாங்கி ஒரு ஸ்டேட்மெண்டு நான் சொல்லுகிறபடி எழுதி கையெழுத்து வாங்கிக்கொள்.

கு:—காகிதம் இங்கி பெட்டி பேனுவுடன் வந்து வக்கீல் பக்கம் நின்று கொண்டு வக்கீல் சொல்வதை எழுதுகிறார்.

வ:— (சொல்வதாவது) இந்த பிராது மோசடியும் சுத்தப்பொய்யுமானது. இந்தப் பிராம்சரி நோட்டு நான் எழுதிக்கொடுக்கவில்லை, இது போர்ஜரி-என்று சொல்லிக் கொண்டு வரும்போது,

க:—சாமி, சாமி, அதெல்லாம் எளுதாதிங்கோ. இந்தபாவத்தை எங்கே கொண்டு போய் தொலப்பேன். 3 மாசமா நடந்து கை நீட்டி சொளையாட்ட பணம் வாங்கி ஊடு கட்டி கல்யாணம் பண்ணி இருக்கிறேன். இப்படி எழுதினு கண்ணும் வாயும் வெளங்க வாண்டாமா?

வ:—(கோபித்துக் கொண்டு) என்னடா மகா சத்திய கீர்த்திபோல் பேசறே அப்படியானுல் வாங்கின பணத்தை கொடுத்தவன் கேட்டதும் எரிஞ்சிபோடரதானே இத்தினை நாளாயி இன்னும் வாய்தா என்ன?

க:—சாமி சாமி கோவிச்சுக்காதிங்கோ, கைக்கு பணம் வாவேண்டாமா 2 மாசத்தில் வந்தரப் போகுது, கொண்டு போய்க் குடுத்து கெஞ்சிக்கிட்டு வந்தரப்போறே, அதுக்குள்ளே நான் எழுதிக்கொடுக்கலேபேரு சரி என்று எழுதினு நல்லாவாயிருக்கும்.

வ:—அப்படி யானுல் வாய்தா கிடைக்காது, உனக்காக வேணுமானுல் எழுதிகொடுத்ததை ஒப்புக்கொண்டு வேறே மாதிரியாய் எழுதுகிறேன்.

க:—சரி அப்படி எழுதுங்கோ சாமி நமக்கெண்த்துக்கு ஊரா முதலு.

வ:—ராமச்சந்திரா அந்த 2 வது பாராவை அடிச்சு இந்தமாதிரி எழுது—நான் வாதியிடம் ஒரு கூட்டு வியாபாரம் செய்ய ஜாமீனுக்காக இந்த பிராம்சரி எழுதிக்கொடுத்தேன்.

க:—சாமி சாமி அப்படிக் கூட இல்லெங்கே

வ:—கோபித்துக்கொண்டு ராமச்சந்திரா இத்தனை நேரம் வேலையைக் கெடுத்ததற்கு 15 ரூ பிடித்துக்கொண்டு அவன் பணத்தை தலையச்சுற்றி எறிந்து விடு. இதெல்லாம் கிளித்தெரி, இந்த சத்தியகீர்த்தி சாவகாசம் நமக்கு வேண்டாம இவன் சொல்கிறபடி எழுதினுல் நாளைக்கு நம்மிடம் ஒரு கட்சிக்காரன் கூட வரமாட்டான்.

கு:—கடன் வாங்கினவனுக்கு ஜாடை காட்டி பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கச் சொல்லுகிறார்.

க:—சாமி சாமி எசமாங்கோ இப்படி கோவிச்சிக்கலாமா, நாங்கல்லா காட்டாள் தானே, கோர்ட்டு சங்கதி எங்களுக்கெப்படி தெரியும், எசமாங்க தானே சொலிக்கொடுக்கணும், நீங்க என்னமோ எழுதிக்கொங்கோ, நமமை ஏதாவது சத்தியம் கேட்டுடப் போராங்கோ, அது மாத்திரம் பார்த்துக் கொங்கோ.

வ:—சரி அதல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். ராமச்சந்திரா எழுது பிராம்சரியில் கண்டபடி பரிகாரம்பெறவில்லை கூட்டு வியாபாரக்கணக்குகள் இருக்கிறது இதை கமீஷன் வைத்து லாப நஷ்டம் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

க:—சாமி சாமி அப்படி எழுதினு நாளைக்குக் கணக்கு காட்ட வாண்டாமா ?

வ:—அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நம்மிடம எத்தனையோ கணக்குகள் இருக்கிறது குமாஸ்தாவைப் பார்த்து O S. No. 43-க்கு காட்டினமோ அந்த கணக்கு புஸ்தகங்கள் எல்லாம் நம்மிடம் இருக்கிறதல்லவா.

கு:—ஆம் அதுவும் இருக்கிறது வேறு கேசுகளுக்கு வந்த கணக்குகளும் இருக்கிறது.

க:—சாமி சாமி இதெல்லாம் நமக்கு எப்படி ஒதவுமுங்கோ.

வ:—அடபயித்திக்கார ஏதோ இரண்டு மூட்டை கணக்குகளை கொண்டு போய் திடீரென்று முனிசிப்பு முன்னுல் போட்டால் பயந்து கொள்ளவாண்டாமா? நம்ம முனிசிப்பு கணக்கு மூட்டை கண்டதும் 6 மீ வாய்தா தானுகவே கொடுத்து விடுவார்.

க:—அப்போ சாமி கணக்கை தொறந்து பாக்கமாட்டாங்களா? கம்மிசனர் நேமிக்க மாட்டாங்களா? அப்பரம் சிக்கிக்கிட்டாக்க.


வ:—அது என் வேலையல்லவா, அப்படி பாக்கரதாயிருந்தால் மூட்டையை பிரிக்க 2-மணி நேரமாகும். அதுவும் மிஞ்சி அதைப் பிரித்தாலும் அந்த கணக்கை பார்த்து என்ன கணக்கு யாருடைய கணக்கு என்று கண்டு பிடிக்கவே முடியாது. இன்னும் எத்தனையோ வழி இருக்கிறது. கமிஷனர் ஏற்பட்டாலும அவரையும் சரிபண்ணிக்கொள்ளலாம். அதைபற்றி நீ கவலைப்படாதே. கமிஷனர் ஏதாவது தகரார் பண்ணினுல் அவர் கேசுகளில் நான் கமிஷனரா வந்தா அவரை இழுத்து விட்டு விடுவேன். எதிர் வக்கீலுக்கும் இப்படியெல்லாம் செய்யா விட்டால் கோர்ட்டுக்கு கேசே வராதென்று தெரியும். அவரும் இப்படி எத்தனையோ தடவை செய்திருப்பார், முனிசிப்பும் நல்லவர். அவரும் வக்கீலாயிருந்து வந்தவர் தானே, இதெல்லாம் வாய்தா வாங்க சகஜம் தான் என்று அவருக்குந் தெரியும். உனக்கு எப்படி ஆனுலும் 2 வருஷத்திற்கு கம்மியில்லாத வாய்தா பாத்துக்கோ, அதற்குள் கடன் கொடுத்தவன் அசலில் 100, 200 தள்ளிக்கொண்டாவது கொடு என்று உன் காலே வந்து பிடிக்கிறுன் பார்த்துக்கோ, ஒன்றுக்கும் பயப்படாதே.

க:—அய்யப்போ அதல்லாம் வாண்டாஞ்சாமி கொடுத்தவனுக்கு நல்ல பிள்ளையாப் போகணும் நீங்கஎன்னமோ எழுதிக்கோங்கோ எனக்கெல்லாம் இரண்டே மாசம் வாய்தா போதும்.

வ:—சரி எழுதப்பா பாக்கி O. S. No. 21-க்கு ஸ்டேட்மெண்டு எழுதினேமே அதை பார்த்து எழுதி கையெழுத்து வாங்கிகொள் கோர்ட்டுக்கு வரும்போது பாக்கி பணத்தையும் கொண்டு வரச்சொல்லு.

க:—சாமி நாளைக்கு பாக்கி பணங்கொண்டாரனுங்கோ.

---



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு புரட்டாசி 2உ

# மதத்தைப் பற்றிய விபரீதம்.

மத சம்மந்தமான புரட்டுகளை நாம் வெளியாக்கி கண்டித்து வருவதில் வைதீகக் கொள்கையுடைய பார்ப்பனரல்லாதாரிலே அனேகருக்கு மனவருத்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதற்கேற்றாற் போல் மதத்தின் பேரால் வயிறுவளர்க்கும் பார்ப்பனர்களும் நம்மைப்பற்றி இம்மாதிரி ஆசாமிகளிடம் விஷமப் பிரசாரமும் செய்து வருவதினால், அவசரப்பட்டு மிகவும் விபரீத கொள்கைக்கும் மூட வழக்கங்களுக்கும் கட்டுப்பட்டவர்களும் "பழக்கம்" "பெரியோர் போனவழி" என்கிற வியாதிக்கும் ஆளானவர்களும் இம்மாதிரி விபரீதமாக கருதி வருத்தப்படுவதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றும் தோன்றவில்லை.

தனவைசிய நாடு என்கிற நாட்டுக்கோட்டை செட்டியார்கள் நாட்டில் நாம் பிரசாரத்திற்கு சென்றிருந்த காலையிலும் கூட நெற்குப்பை என்ற ஒரு ஊரிலுள்ள வைதீகச் செட்டியார்மார்களை இப்படித்தான் ஒரு பார்ப்பனன் சொல்லி ஏமாற்றிவிட்டான். அதாவது ராமசாமி நாயக்கர் என்கிற ஒருவன் வந்து நாட்டையே பாழாக்குகிறான், கலி அவனால் தான் வெளியாகிறது, நாஸ்திகம் பேசுகிறான், அவன் பேச்சைக் கேட்டால் சிறுபிள்ளைகள் எல்லாம் கெட்டுப் போவார்கள், பிறகு கோயில் போய்விடும், மடம் போய்விடும், விபூதி போய்விடும் என்பதான பலவிஷயங்களைச் சொல்லி ஏய்த்துவிட்டான். இந்தவார்த்தைகளை நம்பி அங்குள்ள சில கனவான்கள் கூட்டம் கூட்ட இடம் கொடுக்காமலும் கூட்டம் சேர்ப்பதற்காக செய்து வைத்து இருந்த சில ஆடம்பரங்களையெல்லாம் விரட்டி அடித்தும் கூட்டத்திற்கு யாரையும வரவொட்டாமலும் செய்துவிட்டார். பிறகு நாமும் நம்முடன் கூட வந்திருந்த சில நண்பர்களும் கடைத்தெருவில் யாரையும் எதிர்பாராமல் ஒரு காப்பிக்கடையில் போட்டிருந்த பெஞ்சு பலகையை எடுத்துவந்து வீதியில போட்டு அதன்பேரில் நின்று பேச ஆரம்பித்தோம். முதலில் தெருவில் போகிறவர் வருகிறவர்கள் சற்றுநின்று என்னவென்பதாக கேட்க ஆரம்பித்தார்கள். பிறகு அப்படியே உட்கார்ந்தார்கள் இரண்டொரு விஷயங்களைக் கேட்டு அவர்கள் கைதட்டி சிரிக்கவும் அடிக்கடி இம்மாதிரிசெய்யவும், மறைவில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த கனவான்கள் ஒவ்வொருவராய் வந்தார்கள். பிறகு பெண்களும் தாராளமாய் வந்தார்கள். கூட்டம் யாரையும் அறியாமல் தானாகவே பெரிய கூட்டமாய் விட்டது. பிறகு எங்களுக்குத் தெரியாமலே ஒருவர் விளக்குக் தருவித்து விட்டார். இரவு 9½ மணி வரையில் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்து நாங்கள் திரும்பி ஊருக்குப் புறப்படுகையில் ஒரு செட்டியார், பெரியவர், நல்ல வைதீகத் தோற்றத்துடன் இருந்தவர், எங்கள் மோட்டார் வண்டிக்கு பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, ஐயா பெரியவரே சில பார்ப்பனர்கள் எங்களிடம் தங்களைப் பற்றி தப்பும் தவறும் சொல்லி ஏமாற்றி விட்டார்கள். நாங்கள் தங்களைத் தப்பாய் நினைத்து விட்டோம், அதற்காக வருந்துகிறோம். இன்று இரவு இங்கேயே இருந்து நாளைக்கும் ஒரு உபன்யாசம் செய்துவிட்டுப் போகவேண்டும். நானே எல்லா ஏற்பாடும் செய்கிறேன். இன்னும் பல பேர்கள் வந்து கேட்க வேண்டும் என்று எவ்வளவோ தூரம் வேண்டிக்கொண்டார். எங்களுக்கு மறுநாள் வேறிடம் ஏற்பாடாயிருந்ததால் அவர் விருப்பத்திற்கு இணங்கமுடியாமல் போய்விட்டோம். புதுவயலிலும் இம்மாதிரியாகவே செய்தார்கள். பிறகு அவர்களும் இப்படியே கூட்டமுடிவில் வந்தனுபசாரம் செய்யும்போது எடுத்துச் சொன்னார். கடையூரிலும் இதுபோலவே நடந்தது. கடைசியாக வாலிபர்களிடமாத்திர மல்லாமல் பெரியோர்களிடமும் மிகவும் திருப்தியுடனே வந்து சேர்ந்தோம். எனவே விஷயங்களை பகுத்தறிய சோம்பல் பட்டுக்கொண்டு தகுந்த அளவு மூளையை செலவு செய்வதில் சிக்கனம் காட்டியும் அவசரப்பட்டு ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்களே அல்லாமல் உண்மையை அறியமாட்டேன் என்கிறார்கள். இதற்காக நாம் இவர்கள் விஷயத்தில் பரிதாபப்படுவதல்லால் வேறு ஒன்றும் செய்யமுடியாததற்கு வருந்துகிறோம், இம்மாதிரி கூட்டத்திற்குள் இது சமயமும் வைதீகக்கூட்டத்தில் மிகுதியும் எங்குபார்த்தாலும் "கலி வந்து விட்டான்" "மதம் போச்சுது" "கடவுள் போச்சுது!' -'புராணங்கள் போச்சுது" "நாஸ்திக மாச்சுது" என்கிற வார்த்தைகளே அடிபடுகிறதாக சேதிகள் வந்துகொண்டிருக்கிறது. இதுமாத்திரமல்லாமல பார்ப்பனரல்லாதா கட்சியில் பாரம்பரியமாக இருந்து வருவதாக பெருமை பாராட்டிக் கொள்பவர்களும இப்படியேதான் பேசுவதாக தெரிகிறது. அதாவது "பார்ப்பனர்கள் அக்கிரமத்தை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச்சொலலட்டும், சர்க்கார் விஷயத்திலும், காங்கிரஸ் விஷயத்திலும் உள்ள புரட்டுகளையும் சொலலட்டும் நமக்கு அதைபபற்றி நல்லதுதான். ஆனால மதத்தில கைவைக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்" என்கிறதாகவே பேசுகிறார்களாம். மற்றொரு கூட்டத்தினிடையிலோ வென்றால் பார்ப்பனா மதம் புராணம் இந்தமாதிரி புரட்டுகளைக் கண்டிக்க வேண்டியதுதான் ஆனால் காங்கிரசைக் கண்டித்து தேசீயத்தைக் கெடுக்க வேண்டாம் என்று சொல்லுங்கள் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. இதற்கெல்லாம் நாம் என்ன செய்யக்கூடும். அவரவர்கள் சபலமும் மூடபக்தியும் சுயநலமும் நம்மீது குற்றம் கூறச்செய்கிறதே யல்லாமல் வேறல்ல. எப்படிச்சில பேர்வழிகள் தங்கள் சுயநலத்திற்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் தேசத்தின் பேரால் "காங்கிரசையும்" "தேசீயத்தையும்" உண்டாக்கி உபயோகித்துக்கொண்டார்களோ அதுபோலவேதான் சிலர் சுயநலத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் கடவுள் பேரால் மதத்தையும் புராணங்களையும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். மனிதனுக்கு கடவுளும் மதமும் புராணமும் எதற்காக இருக்கவேண்டியது என்பதே நமது மக்களுக்கு ஏறக்குறைய முழுதுமே தெரியாது என்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது.

மனிதன் ஜீவன் காலத்தில்கூடுமானவரை அன்பாகவும் மனிதசமூகம் வாழ்க்கையில் ஒழுக்கமாகவும் நடந்து கொள்ளுவதற்காகவே கடவுளை மனிதன் உணரவேண்டியவனாக இருக்கிறான். அதுபோலவே அவ்வன்புக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்ற முறைகளைக் கற்பிக்கவே மதம் என்பதை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியவனாக இருக்கிறான். அப்படிக்கு இருக்க கடவுளுக்காகவும் மதத்திற்காகவும் மனிதன் இருக்கிறான் என்பதாக மக்களுக்கு உணர்த்தப்பட்டு மக்கள் எல்லோரும் கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற முயன்றுவிடுகிறார்கள். இதனால் கடவுளைக் காப்பாற்றுவதற்கு நாம ஏன கவலைப்படவேண்டும். கடவுள் நமமால் காப்பாற்றக் கூடியவராயிருந்தால் அவருக்கு கடவுள் தன்மையேது என்பதாக யாராவது உணருகிறார்களா? நாம் கடவுளைக் காப்பாற்றுவது என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது! எவனோ தான் பிழைப்பதற்காக கடவுளைக் காப்பாற்றுங்கள். கடவுளைக் காப்பாற்றுவது என்பது எனக்கு கொடுத்து என்னையும் என் பிள்ளை குட்டிகளையும் காப்பாற்றுவதுதான் என்று சொல்லுவானானால் அதை நாம் நம்பிக்கொள்ளுவதா என்றுதான் கேட்கின்றோம். நம்மைக்கடவுள் காப்பாற்றுவதா நாம் கடவுளைக் காப்பாற்றுவதா என்பதே நமக்குப் புரியவில்லை. வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும கடவுளுக்கு பயப்பட வேண்டுமே அல்லாமல், கடவுளைக் காப்பாற்றுவது, அதற்கு சோறுபோடுவது, கல்யாணம் செய்வது, பிள்ளை குட்டிகளை பெறச் செய்வது என்பது போன்றவைகளெல்லாம் செய்வதுஎதற்கு? என்றுதான்கேட்கிறோம். இம்மாதிரி செய்பவர்கள் கடவுளுக்கு பயப்படுகிறார்களா என்பதையும் கவனித்துப் பார்க்கும்படிவேண்டுகிறோம். திருடுகிறவன், கொள்ளையடிக்கிறவன், கொலைசெய்கிறவன், மற்றும வாழ்க்கையில் எத்தனையோ அக்கிரமங்கள், கூடா ஒழுக்கங்கள் செய்கிறவர் ஆகிய எல்லோரும் கடவுளைக் காப்பாற்றுவதாக, அபிஷேகம் செய்வதாக, திருடி பதில் அக்கிரமம செய்து தப்புவழிகளில் சமபாதித்த திரவியத்தில் பங்குதருவதாக, கோவில்கட்டுவதாக, மேளம் சதிர்க்கச்சேரி வைப்பதாக, தாசிகள் 10 பேரை நியமிப்பதாக சொல்லி அப்படியே செய்கிறான் என்றே வைத்துக் கொள்ளுவோம். இதனால் செய்த

வனுக்காவது உலகத்துக்காவது என்ன பிரயோஜனம் என்றுதான் கேட்கிறோம்.

கடவுள் என்பதையே மக்களுக்கு சரியானபடி உணர்த்தாமல் சில சுயநலக்காரர்கள் போலிபக்தியை உண்டாக்கி எல்லோரையும் நாஸ்திகர்களாக்கிவிட்டார்கள். கடவுள் தன்மையின் உண்மையையும் கடவுளிடத்தில் பயத்தையும் மக்களுக்கு உண்டாக்கி இருந்தால் நமது நாட்டில் இவ்வளவு அக்கிரமம் நடைபெறுமா? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரியான பொய் பக்தி, புரட்டு பக்தி, வேஷ பக்தி, மூட பக்தி ஆகிய நாஸ்திகத் தன்மைகள் நமது நாட்டைவிட்டு ஒழிந்தாலொழிய நாட்டில் அன்பும் சமத்துவமும் ஒழுக்கமும் ஏற்படப் போவதில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

இதுபோலவே மதம் என்கிற விஷயங்களும் நமக்கு பெரிய ஆபத்தாகவே இருக்கிறது. மதம் என்பதை ஒழுக்கத்திற்கான கொள்கைகள் என்பதாக எண்ணாமல் சில சடங்குகள் என்பதாகவே கற்பிக்கப் பட்டிருக்கிறது. மதத்தில் தீவிரப்பற்றுள்ள எவனும், பொய் சொல்லாமலிருக்கிறானா, அக்கிரமம் செய்யாமலிருக்கிறானா என்பதைக் கவனித்தால் பெரிய பெரிய வைதிக வேஷக்காரர்களின் யோக்கியதை எல்லாம் விளங்கிவிடும். நமக்கு நேரில் அனேக சாஸ்திரியார்களின் யோக்கியதையும், பாகவதர்களின் யோக்கியதையும், சன்னியாசிகளின் யோக்கியதையும், தினமும் மூன்று வேளை குளித்து ஆறுவேளை கோயிலுக்கு போய் வாரத்தில் 7 நாள் விரதமிருக்கும் பெரியோர்கள் ஆசாரக்காரர்கள் பக்திமான்கள் என்கிறவர்கள் யோக்கியதையும் நன்றாகத் தெரியும். கடவுள் பக்தியும் மதமும் ஏன் இவர்களை இப்படி நடத்துகிறது என்று ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

பொதுவாக இவைகள் ஒருபுறமிருந்தாலும் நமக்கு கற்பிக்கப்பட்ட கடவுள்கள் எல்லாம் யாராய் இருக்கிறார்கள். பிறப்பு இறப்பு முதலியவைகளில் ஈடுபடுத்தி மனித வாழ்க்கையில் உள்ள எல்லா காரியங்களும் ஒன்று கூட விலக்கில்லாமல் அதற்கு கற்பித்து நம்மு தலையில் போடப்பட்டிருக்கிறதேயல்லாமல் உண்மைத் தத்துவத்துடன் கூடிய கடவுள் நமக்கு கற்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டும். வயோதிகர்கள் இதற்கு இடங்கொடுக்க மாட்டார்களானாலும் வாலிபர்கள் இதை உணர்ந்து பரிசுத்த வாழ்க்கையில் ஈடுபடவேண்டும்.

அதுபோலவே நமது மதம் என்பது என்னமாயிருக்கிறது. இதைப்பற்றி பலதடவை எழுதி இருக்கிறோம். மறுசமயம் எழுதுவோம்.

## பகற்கொள்ளை.

சமீபத்தில சென்னையில் கூடப் போகும் காங்கிரஸ் என்னும் கூட்டத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் வேண்டுமென்று 'பெரிய காங்கிரஸ்வாதி' யாகிய ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியார் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நமது நாட்டுமக்கள் சிறப்பாகப் பார்ப்பனரல்லாதார் என்போர்கள் குருட்டு நம்பிக்கைக்கும் மூடபக்திக்கும் ஏமாற்றலுக்கும் பணம் கொடுப்பதில் வீரர்களாவார்கள்.

நாம் கொடுக்கும் பணம் என்ன ஆகிறது, எதற்கு உபயோகப் படுகிறது, யார் செலவு செய்கிறார்கள், அதன் பயன் என்ன என்பதைப்பற்றி கவனிக்கிறவழக்கமே கிடையாது யாராவது பணத்திற்காக என்னவேண்டியதும், யாராவது பத்திரிகையில் நல்ல காரியம் என்று எழுதவேண்டியதும், யாராவது வக்கீலோ உத்தியோகஸ்தரோ சிபார்சு செய்ய வேண்டியதும், கண்மூடிக்கொண்டு அள்ளிக் கொடுக்க வேண்டியதுமே நமது யோக்கியதையாய்ப் போய்விட்டது.

தமிழ் நாட்டில் தமிழ் மக்களின் பணம் எவ்வளவு செலவாகிறது என்பதின் கணக்கு யாருக்காவது தெரிகிறதா? கவலை இருக்கிறதா வென்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். சாதாரணமாய் மதம் என்னும் பெயரால் மாத்திரம் கோயில் மடம் முதலியவைகளுக்கு வருஷ ஒன்றுக்கு 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. இப்பணம் முழுவதும் பார்ப்பனீயத்திற்கும் பார்ப்பன பிரசாரத்திற்கும் செலவாகிறதல்லாமல் மக்களுக்கு அதனால் ஏதாவது கல்வி, ஒழுக்கம், பக்தி முதலிய குணங்கள் உற்பத்தியாகிறதா? இவைகள் தவிர உற்சவம், கோயில் கட்டுதல் முதலிய காரியங்களுக்கு மக்கள் செய்யும் செலவு எவ்வளவு ஆகிறது! தவிர குடும்ப நித்திய வாழ்க்கையில் சடங்கு முதலியவைகளில் ஏற்படும் செலவுகள் எவ்வளவாகிறது.

ஆகவே கோடிக் கணக்கான பணங்கள் நமது கையிலிருந்து செலவாகின்றன. எந்த ஏழை மகனும் தான் கஷ்டப் பட்டு சம்பாதித்த பணத்தில் ஒரு பெரும் பாகத்தை மேல் கண்டவைகளுக்குச் செலவு செய்தே தீருகின்றான். ஆனால் இவைகளினால் அந்த ஏழை மக்கள் என்ன பலன் அடைகிறார்கள் என்று பார்த்தால் ஒன்றும் இல்லாததோடு குருட்டு நம்பிக்கை தான் ஏற்படுகிறது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக மதத்தின் பெயரால் இம்மாதிரி செலவு செய்து கொண்டு வந்த மக்களின் சமூகம் வெள்ளைக்கார அரசாங்கம் வந்த பிறகுதானே 100க்கு 5 பேர்களுக்காவது கையெழுத்துப் போடத் தெரிந்திருக்கிறது. அதுவும் 100க்கு 5 பேர் கையெழுத்துப் போடத்தெரிந்ததற்கு வேறு பணம் கொடுத்துதான் தெரிந்ததேயல்லாமல் இந்த மதத்தின் பெயரால் செலவாகும் கோடிக் கணக்கான ரூபாயில் இருந்து ஏதாவது பிள்ளையார்சுழியாவது போடக் கற்றுக் கொடுக்கப்பட்டதா? ஆனால் இவ்வளவு பணங்களையும் எடுத்துச் சாப்பிடும் ஒரு கூட்டத்தாரில் 100க்கு 5 பேருக்காவது படிப்பு தெரியாமலிருக்கிறதா? மத சம்பந்தமாகவும் பணம் கொடுக்கிறவர்கள் நாமாகவே யிருக்கின்றோம். அரசாங்க சம்பந்த மாகவும் பணம் கொடுக்கிறவர்கள் பெரும்பாலும் நாமாகவே இருக்கிறோம். ஆனால் மதசம்பந்தமாகவும் அரசியல் சம்பந்தமாகவும்படித்தவர்கள்பார்ப்பனர்களாகவே இருக்கிறார்கள். நம்மவர்கள் மதசம்பந்தமாய் படிக்கவேண்டுமென்றால் மதம் இடம்கொடுப்பதில்லை. அதாவது 'வேதம்' நம்மை படிக்க கூடாது என்கிறது. அரசியல் சம்பந்தமாகவோ என்றால் அதிலும் நாம் படிக்க முடிவதில்லை. காரணம்என்னஎன்றால், நமது பிள்ளைகளுக்கு 'படிக்கும் சக்தி இல்லையாம்' அதாவது பரம்பரையாய்ப் படித்து வந்த வழக்கமில்லையென்று சொல்லி பரீக்ஷையில் தள்ளிவிடப் படுகிறோம் நமக்கும் படிக்கும் சக்தி இருக்கிறது, நமக்கும் படிக்கும்படியான சமசந்தர்ப்பம் ஏற்பட வேண்டும் என்று யாராவது முயற்சி செய்தால் அது 'வகுப்புத் துவேஷ' மாகி விடுகிறது.

இதைத்தினமும் பார்த்துக்கொண்டேதான் மேலும் மேலும் இவ்வழிகளில் பணத்தைச் செலவுசெய்து கொண்டுவருகிறோம்.

இதோ ஒரு புறம் இருக்க பார்ப்பனப் பிரசாரத்துக்கென்றே வெளிப் படையாய் வரு

## நீல் சத்தியாக்கிரகமும் "தலைவர்களும்"

நீல் சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கு ஆதாரமாயிருந்த சென்னைத் "தலைவர்"களில் ஒருவரான திரு. குழந்தை, திரு. சாமிநாத முதலியாரைப் பிடித்தவுடன் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார். அதில் தான் சத்தியாக்கிரகத்திற்கு தலைவனல்லவென்றும் சத்தியாக்கிரகி அல்லவென்றும் ஸ்ரீமான் சாமிநாத முதலியாரே அதன் தலைவரென்றும் எழுதி இருக்கிறார்.

சத்தியாக்கிரக கூட்டங்களுக்கெல்லாம் தலைமை வகித்து, சத்தியாக்கிரகிகளுக்கு உற்சாகத்தையும் கொடுத்து பேசிவிட்டு, தன்னுடைய பெயரையும் போட்டுக்கொண்டு, இப்போது தலைவர் என்பவரை சர்க்கார் பிடித்தவுடன் "நான் தலைவனல்ல" "சத்தியாக்கிரகியல்ல" என்று எழுதி வெறு ஆசாமியைக் காட்டிக் கொடுத்துவிட்டு தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது எவ்வளவு பயங்காளித்தனம் என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். சென்னைத் தலைவர்களின் யோக்கியதை வெளியாவதற்கு திரு. குழந்தை உதவிசெய்தது நமக்கு மகிழ்ச்சியே. ஆனால் முதலிலேயே சத்தியாக்கிரகக் கூட்டமொன்றில் திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள் பேசும்போது இந்த மாதிரி கனவான்களின் யோக்கியதைகளை எடுத்துச் சொல்லி "தக்க சமயத்தில் இவர்கள் ஏமாற்றிவிட்டுப் போய்விடுவார்கள் ஆதலால் இவர்களை நம்பி இறங்காதீர்கள்" என்று சொன்னார்.

அங்கிருந்த பார்ப்பனர்கள் கலகம் செய்து அவரை பேசவிடாது தடுக்கமுயற்சித்தார்கள் எப்படி இப்போது இவர்கள் யோக்கியதை வெளியாய் விட்டது! ஸ்ரீமான் சாமிநாத முதலியாரை சர்க்கார் பிடித்ததும் ஸ்ரீமான் குழந்தையின் சினேகிதரான மற்றொரு தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை இப்போது பூதக்கண்ணாடி போட்டுத் தேடினாலும் கண்டு பிடிக்க முடியவில்லை பேச்சு மூச்சு ஒன்றையும் காணோம் என்ன சத்தியாக்கிரகம்? என்ன தலைவர்? எவ்வளவு அபிமானம்? எதற்காக நடைபெறுகிறது? யார் நடத்துகிறார்கள்? என்கிற விஷயங்களை வாசகர்களே உணர்ந்து கொள்ளக் கோருவதுடன் இனியாவது நமது பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்குபுத்திவருமா என்று ஆசைப்படுகிறோம்.

கிற மதாச்சாரியார்கள், லோக குருக்கள் முதலியோருக்கு எவ்வளவு பணம் கொடுக்கின்றோம். உதாரணமாக இந்த வருஷத்தில் மாத்திரம் லோக குரு என்பவர் நமது தமிழ்நாட்டில் தமிழ் மக்களிடத்தில் கொள்ளைகொண்ட தொகை எவ்வளவு என்பது யாருக்காவது தெரியுமா? சுமார் 10 லட்ச ரூபாய் போல் வசூல் செய்து சுமார் 5 லட்சம் ரூபாய் போல் பார்ப்பனர்களுக்கே பொங்கிப் போட்டு விட்டு மீதியை மூட்டை கட்டிக் கொண்டு போய் விட்டார். இதனால் பணம் கொடுத்தவர்களுக்கு என்ன லாபம் கிடைத்தது? ஒரு மனிதன் காலில் மற்ற மனிதன் விழுந்து கும்பிட்டதும், அந்த மனிதன் காலைக்கழுவிய தண்ணீர் சாப்பிட்டு தலைமேல் தெளித்துக்கொண்டதும், பணம் வாங்கி மூட்டைக் கட்டிக்கொண்ட மனிதன் நம்மைப் பார்த்ததும் நம்முடன் பேசியதும் நமது பாஷையை உச்சரித்ததுமான பாவங்களுக்கு நம்ம பணத்தைக் கொண்டே பிராயச்சித்தம் செய்து கொண்டதல்லாமல் வேறு ஏதாவது ஒரு புதுக்கோட்டை பாமன் காசளவு பலனுண்டாயதா? ஒன்றுமில்லையே. ஒரு சங்கராச்சாரியார் கொள்ளை அடிக்கவே இம்மாதிரி என்றால், இது போல் எத்தனை சங்கராச்சாரிகள் எத்தனை ஜீயர்கள் எத்தனை நல்லாஞ் சக்ரவர்த்திகள் எத்தனை அண்ணங்கார்கள் எத்தனை மகந்துக்கள் எத்தனை தம்பிரான்கள் எத்தனை தல குருசுவாமிகள்? இவர்கள் கொள்ளையின் பலன் முன் சொன்னது போல் காலில் விழுந்து பாத தீர்த்தம் சாப்பிட்டதல்லாமல் மஞ்சள் அரிசியை தலையில் போட்டுக் கொண்டதல்லாமல் ஒரு காதொடிந்த ஊசி அளவு பலனுண்டாயதா?

இதுபோலவே தேசத்தின் பேரால் அடிக்கப்படும் கொள்ளைகளையும் சற்று கவனிப்போம். காங்கிரசு என்கிற ஒரு ஸ்தாபனத்திற்கு மாத்திரம் சென்ற 4, 5 வருஷகாலமாக எத்தனை லட்ச ரூபாய் நமது மக்களால் கொடுக்கப்பட்டு வந்தது? திலகர் சுயராஜ்ய நிதி என்னும் பேரால் மாத்திரம் நமது நாட்டில் சுமார் 7, 8 லட்ச ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்திருக்கிறோம். இதுவல்லாமல் இந்த காங்கிரசு கான்பரன்சு என்கிற கூட்டங்களுக்குப் போய்வர நமது மக்கள் இதுவரை செலவு செய்தது ஏறக்குறைய 4, 5 லக்ஷ ரூபாய்க்குக் குறையாதென்றே சொல்லுவோம். இதனால் நமக்கு ஏற்பட்ட லாபம் என்ன என்று யாராவது சொல்லமுடியுமா? ஒரு கடுகளவு லாபமில்லை என்றாலும் கெடுதியாவது இல்லாதிருந்தது என்று யாராவது யோக்கியமாய் சொல்ல முடியுமா? இக்காலத்தில் இந்த நாட்டில் எந்தெந்தவிதமான கெடுதிகள் மனித வாழ்க்கையில் இருக்கின்றதோ, எந்தெந்தவிதமான ஒழுக்கக்குறைவுகள் மனித வாழ்க்கையில் இருக்கின்றதோ அவைகளையும் அல்லாமல் இனியும் என்ன என்ன ஏற்படக்கூடுமோ அவைகளும் இந்த மதத்தாலும் காங்கிரசினாலும் வந்ததே அல்லாமல் வேறு ஏதாவது காரணம் சொல்ல முடியுமா? இதைப்பற்றி யாரிடத்தில வேண்டுமானாலும் பந்தயங்கூறத் தயாராயிருக்கிறோம்.

ஆனாலும் இவைகளை யாராவது கவனிக்கிறார்களா? இன்னும் மக்கள் மேலும் மேலும் இதையே செய்யத் தூண்டப்படுகிறார்களே யல்லாமல் யோக்கியமான முறையில் நடத்தப்படுகிறார்களா? இத்தனையும் போதாமல் இந்த காரியங்களுக்கு மோக்ஷம் என்னும் பேரால் சங்கராச்சாரி முதலியவர்கள் வசூலிப்பது போல் கதர் என்னும் பேரால் மகாத்மா காந்தியைக் கொண்டு பணம் வசூலிக்கப்படுகிறது. இதுவும் ஏறக்குறைய ஒரு லக்ஷத்திற்கு மேல் நமது மக்கள் கையைவிட்டுப் போய்விடும். கடைசியாக கதர் பிரசாரத்தின் பலனும் கதருக்காகக் கொடுத்ததின் பலனும் என்ன என்று பார்ப்போமானால் "பார்ப்பனர்கள் தியாக மூர்த்திகள், அறிவின் பொக்கிஷங்கள், ஆதி திராவிடர் முதல் யாவரும் சமஸ்கிருதம் படிக்கவேண்டும், பகவத்கீதை படிக்கவேண்டும், ராமாயணம் படிக்கவேண்டும், மூடக் கொள்கைகளை விட்டுவிடக்கூடாது" என்பவைகள் தானே யல்லாமல் வேறொன்றுமில்லை.

இவ்வளவும் போதாதென்பதாக, இப்போது சென்னையில் நடைபெறும் காங்கிரசு என்கிற பேரால் ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியாரால் இரண்டு லக்ஷம் ரூபாய் கேட்கப்படுகிறது. இவர் ஒரு விதத்தில் மகாத்மாவுக்கு அண்ணனாகலாம். எப்படியெனில் மகாத்மாவோ பார்ப்பனர்களை அறிவின் பொக்கிஷம் என்று இப்பொழுது சொல்லுகிறார். ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியாரோ சென்ற வருஷத்திலேயே பார்ப்பனரல்லாதாருக்கு அறிவே இல்லை என்பதாகச் சொல்லிப் பார்ப்பனர்களை அறிவாளிகள் என்றார். பார்ப்பனர்கள் அறிவின் பொக்கிஷம் என்றவருக்கு நாம் ஒன்றரை லட்சம் கொடுத்தால், பார்ப்பனரல்லாதாருக்கு அறிவில்லை பார்ப்பனருக்குத்தான் அறிவிருக்கின்றது என்று சொன்னவருக்கு இரண்டு லட்சம் கொடுப்பது அதிகம் என்பதாக யார் சொல்லக்கூடும்? எனவே நமது பணங்கள் எந்தெந்த வழிகளில் பகற்கொள்ளை போகின்றது என்பதும், அதனால் நமக்கு என்ன பயன் உண்டாகிக்கொண்டு வருகிறது என்பதையும் யாராவது யோசித்துப்பார்த்தால் நமது நிலை நமக்கு விளங்காமல் போகாது. முதலாவது காங்கிரசுக்கும் ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்? அது எது முதல் உண்டாயிற்று? காங்கிரஸ் காரியதரிசி என்கிற முறையில் பணம் கேட்கிறாரா? அல்லது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஏஜண்டு என்கிற முறையில் பணம் கேட்கிறாரா? காங்கிரசு தலைவர் பார்ப்பனர், காங்கிரஸ் காரியதரிசி பார்ப்பனர், காங்கிரஸ் பொக்கிஷதார் பார்ப்பனர். ஒவ்வொரு ஊரிலும் காங்கிரஸ் நிர்வாகம் பார்ப்பனர்கள் கையில் சிக்கி இருக்கிறது. சபைக்குக் காங்கிரஸ் பிரதிநிதிகளாய் தெரிந்தெடுக்கப்படுபவர்களும் பார்ப்பனர்கள். அதன் பலனாய் சர்க்காரில் ஏற்படும் உத்தியோகங்களை அடைபவர்களும் பார்ப்பனர்கள். பார்ப்பனரல்லாதார் யாருக்காவது அதிகாரம் கொடுக்கக்கூடாதா என்றால், பார்ப்பனர் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொண்டு அவர்கள் காலில் விழச் சம்மதிக்கும் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் போன்றவர்களையும், பார்ப்பனர்களுக்குத்தான் அதிக அறிவு என்கிற ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியார் போன்றவர்களையும், ஸ்ரீனிவாசய்யங்கார்தான் தமிழ்நாட்டு மகாத்மா என்கிற ஸ்ரீமான் ஜபவேலு போன்றவர்களையும் அல்லாமல் வேறு யாரையாவது விட்டுச் சேர்க்கிறார்களா? மதுரைத் தேர்தலில் ஸ்ரீமான் ஜோசப்புக்கு நடத்திய மரியாதையையும், சேலம் ஜில்லா கான்பரன்சுக்கு வரவேற்புக் கமிட்டிக்கு அக்கிராசனராக சேலம் சேர்மென் ஸ்ரீமான் தம்மண்ண செட்டியாரைத் தெரிந்தெடுத்ததற்காக சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் அந்த வரவேற்புக் கமிட்டியையே கலைத்து விட்ட யோக்கியதையையும், மூன்று மாதத்தில் சாதித்துவிடுவதாய்ச் சொன்ன ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு கல்யாணசுந்தர முதலியார் ஆகியோர்களாலேயே இதற்குப் பரிகாரம் செய்ய முடியாமல் அஞ்ஞாதவாசம் செய்யும் யோக்கியதையையும் பார்த்தபிறகு எந்த யோக்கியனுக்காவது காங்கிரசுக்குப் பணம் கொடுக்க மனம் வருமா? கொடுத்தாலும் அது நமக்கு ஏதாவது ஒரு பலனைக் கொடுக்குமா என்பதையும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. இவ்வளவு சங்கதி நடந்திருந்தாலும், இம்மாதிரியான பெரும் பகற்கொள்ளைகள் நடந்து வந்தாலும் இவைகளினாலெல்லாம் நமக்கே அவமானமும் கெடுதியும் இழிவும் ஏற்பட்டுக்கொண்டு வந்தாலும், எந்த விதத்திலும் பார்ப்பனர்கள் இஷ்டப்படி நம்மவர்கள் பணம் கொடுக்கமாத்திரம் பின் வாங்குகிறதில்லை என்றே சொல்லுவோம். பார்ப்பனர் வக்கீல், பார்ப்பனர் சட்ட மெம்பர், பார்ப்பனர் ஜட்ஜு, பார்ப்பனர் ஐகோர்ட் ஜட்ஜுக்கு வேண்டியவர்கள். பார்ப்பனர் டாக்டர், பார்ப்பனர் குரு, பார்ப்பனர் குமஸ்தா, பார்ப்பனர் ஏஜண்டு, பார்ப்பனர் சமயல்காரர், பார்ப்பனர் தூதுவர், பார்ப்பனர் தாசர், ஆகிய ஜீவாதாரமான நிலைகள் எல்லாம் பார்ப்பனர் ஆதிக்கத்திலிருக்கும்போதும் பார்ப்பனர்களிடமே மோக்ஷ வீட்டின் சாவிகள் இருக்கிறது என்று நம்மவர் எண்ணிக் கொண்டிருக்கும்போதும், நம்மவர்களே பார்ப்பனர்களுக்குக் கங்காணிகளாய் இருந்து பார்ப்பனீயத்திற்கு ஆதரவளிக்கும்போதும், எந்தவிதத்தில் அவர்களுக்கு பணம் சேராது என்று நாம் சொல்லக்கூடும்? நெற்றி வேர்வை கீழே விழப்பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை பகரப்பகர ஒரு கூட்டத்தார் பட்டப் பகலில் இப்படிக் கொள்ளை அடித்து தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொள்ள வழிவிட்டுக்கொண்டிருப்போமானால் நமக்கு சுய மரியாதை வேண்டும் என்று சொல்லுவதற்கு இதைவிட இன்னமும் என்ன உதாரணம் வேண்டும்?

"திராவிடன்"

---

குறிப்பு ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை சுயமரியாதை சத்தியாக்கிரகம் செய்யும் விஷயமாய் ஒரு வியாசம் எழுதி இருப்பது இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கின்ற நண்பர்களும் தொண்டர்களும் தங்கள் அபிப்பிராயத்தையும் தாங்கள் செய்யக்கூடிய உதவியையும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களுக்கு எழுதி அனுப்பக் கோருகிறோம். விலாசம்;—

திரு N. தண்டபாணி பிள்ளை அவர்கள்,
6/99 பவழக்காரத் தெருவு,
தபால் பெட்டி நெ 292, சென்னை.

## வெட்ட வெளிச்சம்.

காங்கிரசும் தேசபக்தியும் பார்ப்பன ஜாதி யப்பற்றை மீறி நிற்கவில்லை யென்று நாம் பலமுறை குறிப்பிட்டிருக்கிறோம். தேசிய ஸ்தலங்களிலும் பலவகைப்பட்ட சபைகளிலும் ஸ்தாபனங்களிலும் பார்ப்பனர் ஆதிக்கம் பெறுவது அவர்களது ஜாதி நலத்திற்கென்பது ஆங்காங்கு சிறிது வெளிப்பட்டு வருகிறது. இவ்வுண்மை சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற முனிசிபல் எலெக்ஷனில் வெட்ட வெளிச்சமாகி விட்டது. மதுரை முனிசிபாலிடியில் காங்கிரஸ்காரரான திரு. வேதாமய்யர் இருந்த ஸ்தாபனம் காலியாயிற்று. இதற்கு மீண்டும் ஒரு காங்கிரஸ் வாதியை நிறுத்துவதென்று கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் பெரும் பான்மையோரின் முடிவின்படி திரு. ஜியார்ஜ் ஜோஸப் நின்றார். இவருக்கு எதிரியாக நிற்க விரும்பியவர் வக்கில் திரு. ராமநாதய்யாவர். இவரும் காங்கிரஸ் காரரே. காங்கிரஸ் கூட்டத்தில் இவர் நிற்குமாறு அனுமதிக்கப்படவில்லை. எனவே காங்கிரஸ் அங்கத்தினர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு திரு. ஜியார்ஜ் ஜோஸப் அவர்கட்கு எதிரியாக நின்றார். எலெக்ஷனுக்கு முன்னர்,

“இந்த வார்டிலுள்ள 237 வாக்காளருள் 130 பேர் பிராமணர். அவர்கள் அவ்வளவு பேரும் காங்கிரஸ் மெம்பர்கள். வாக்காளர்கள் ராஜீய அபிப்பிராயப்படி நடந்தால் காங்கிரஸ் மெம்பர்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பெரும்பான்மையாகவுள்ள பிராமணர் வகுப்பு வாதங் கொண்டு வாக்குக் கொடுத்தால் நான் தோற்கடிக்கப்படுவேன். பிராமணர் வகுப்பு வாதிகள் என்று ஜஸ்டிஸ் கட்சியார் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் மெம்பர்கள் எல்லோரும் தேசாபிமானமுடையவர்களென்றும் வகுப்புத்துவேஷமற்றவர்களென்றும் காங்கிரஸ் முடிவு கட்டியிருக்கிறது. வருகிற சனிக்கிழமை இதன் உண்மை தெரியும்.”

என்று திரு ஜோஸப் ஒரு அறிக்கை வெளியிட்டார். என்ன செய்தும் முடிவில் திரு. ஜோஸப் எலெக்ஷனில் தோற்கடிக்கப்பட்டார்.

திரு. ஜியார்ஜ் ஜோஸப் தேசாபிமானங் காரணமாக ஒத்துழையாமைக் காலத்தில் வக்கில் தொழிலை விட்டார். சிறைக்கும் சென்றார். மகாத்மாவின் “யங் இந்தியா” பத்திரிகைக்குச் சில காலம் ஆசிரியராகவுமிருந்தார். மிகுந்த ஊக்கமுள்ளவர். பாரிஸ்டர். காங்கிரசினால் முனிசிபல் சபைக்கு நிறுத்தப்பட்டவர். காங்கிரஸ்காரர் மெஜாரிட்டியாகவுள்ள பகுதியில் தோல்வி பெற்றார். காங்கிரஸ் அங்கத்தவராக இருந்து முனிஸிபல் தேர்தலுக்குத் தன்னை நிறுத்தாததற்காக ராஜினாமாச் செய்த ஐயரொருவர் வெற்றி பெற்றார். காரணம் முன்னவர் பார்ப்பனரல்லாதார், பின்னவர் பார்ப்பனர். “என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்?” என்ற பார்ப்பனர் நிலை இனிது விளங்க வில்லையா? மற்ற சமூகத்தினரின் கூட்டுறவால் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களுக்குண்டாகியிருக்கும் செல்வாக்கினை உபயோகித்துத் தங்கள் ஜாதிக்கு ஏற்றமுண்டாக்கப் பார்ப்பனர் முயல்கின்றன ரென்னும் உண்மை நாள்தோறும் வெளியாகி வருகின்றது. தேர்தலில் வெற்றிபெறுதலும் தோல்வியுறுதலும் இயல்பான காரியங்களேயாகும். ஆனால் குறிப்பிட்ட இத்தேர்தலின் முடிவு காங்கிரசுக்கு அவமானமுண்டாக்கி விட்டது. தேசிய வாதிகள் வகுப்புவாதிகளன்று என்று புலம்பும் வாக்கு ஒடிந்து வீழ்ந்தது. தங்களுக்கு வசதிப்படுகிறவரை காங்கிரஸ் வேண்டும் என்ற கொள்கையை திரு. ராமநாதய்யரும் பார்ப்பன ஓட்டர்களும் நிதரிசனப்படுத்தி விட்டனர். இத்தேர்தல் முடிவன்பின்னர், திரு. ஜியார்ஜ் ஜோஸப் பின் வருமாறு கூறுகிறார்:—

“பதினோராவது வார்டு தேர்தல்முடிவு, பிராமணர்களுக்குத் தேசியத்தைவிட பிராமணீயந்தான் மேலென்பதையும், அதில் பிராமணர்களின் வகுப்பு வாதம் வெற்றிபெற்றதையும் இத்தேர்தலில் என் பிராமண நண்பர்களனைவரும் என்னைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதையும் நன்கு விளக்கியது. இச்செய்கை பிராமணன் தன் பரம்பரையான வகுப்பு வாதத்திற்கு தேசியத்தை விட்டுக் கொடுத்ததே யாகுமெனக் கருதுகின்றேன். பிராமண வகுப்பு தனிப்படுத்தி வைக்கப்படும் போபத்திலிருப்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் வகுப்புவாதம் சுயநலத்தின்கொள்கை என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்வதுடன் பெரும்பான்மையோரின் சுயநலத்திற்குமுன் சிறுபான்மையோரின் சுயநலம் ஒன்றும் செய்யமுடியாதென்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன், இதுவரையில் நான் மாய்கையிலமிழ்ந்திருந்தேன். பிராமணன் ஒருவனுக்கு தேசிய விஸ்வாசத்தைவிட ஜாதீயவிஸ்வாசம்தான் பலமானதென்பதைத் தற்போதுதான் நான் கண்டுகொண்டேன்”

இப்பொழுதாவது திரு. ஜியார்ஜ் ஜோஸப் விழித்துக்கொண்டதைப் பாராட்டுகிறோம். இவர் நன்கு கற்றவர். பிராமணருடனும் மற்றவருடனும் பல்லாண்டு பழகினவர். தேசியத்துறையில்கலந்து தொண்டியற்றியவர். பார்ப்பன தேசிய நண்பர் பலரைக் கொண்டவர். எனினும் அவர்களின் சூழ்ச்சியை இன்றுதான் கண்டறிந்ததாகக் கூறுகிறார். இப்பேர்ப்பட்ட அறிஞர்களை வளைத்துக் கண்ணைக் கட்டிவைக்கும் பார்ப்பனமாயை சாதாரண மக்களை விடுமா? பார்ப்பனர் வசப்பட்டுக் கிடக்கும் பொது ஜனங்கள் உண்மையுணர்வு கொளுத்தப்படவேண்டும். இனியாவது பார்ப்பனரல்லாதார் நலனை நாடிப் பார்ப்பன மாயையை யொழிக்குந் துறையில் திரு. ஜியார்ஜ் ஜோஸப் இறங்கி உழைப்பாரென்று நம்புகிறோம்.

“குமான்.”

---


## “திராவிடன்”

**வேண்டுமா? வேண்டாமா?**

சகோதரர்களே!

பார்ப்பன ஆட்சியாலும், பார்ப்பன சூழ்ச்சியாலும், பார்ப்பன மதத்தாலும், பார்ப்பனப்பத்திரிகைகளின் பிரசாரத்தாலும், நீங்கள் இழந்து கிடக்கும் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் திரும்பவும் அடைய

வேண்டுமா? வேண்டாமா?

**வேண்டுமானால்** அதற்கென்றே உங்கள் தொண்டர்களால், பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகி நடத்தப்பட்டு வரும் **“திராவிடனை”** வாங்கிப் **படியுங்கள்.** “திராவிடன்” தான் போலி தேசீயத்தையும் சுயராஜ்யப் புரட்டையும் தைரியமாய் வெளியாக்கிசுயமரியாதைக்கென்றே உழைப்பவன். எனவே. “திராவிட”னன்றிக் கண்டிப்பாய் உங்களுக்கு கதிமோட்சமில்லை; இதை நம்புங்கள்.


---

**சூத்திரனென்று உன்னைச்**

**சொல்லிக் கொள்ளாதே!**

**சூத்திரன் என்றால்**

**தாசிமகன் என்று பொருள்.**

## மதுரையில் வகுப்புவாதம்,

மதுரையில் அணித்தே நடை பெற்ற நகர சபைத் தேர்தலில், காங்கரஸ் என்று இரவு பகல் ஓயாது உழைத்துப் பலதிறத்தியாகங்கட்கு உட்பட்ட ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் பிராமணவாக்காளர் நிரம்பிய ஒரு வட்டத்தில் அபேட்சகராக நின்றனர். அவரை எதிர்த்தவர் ஒரு பிராமணர். ஸ்ரீமான் ஜோஸப் காங்கிரஸ் சார்பாக நின்றார், பிராமணரோ காங்காசுடன் பிணங்கித் தமது வகுப்பாரை நம்பி நின்றார், நிகழ்ந்த தென்னை? பிராமணர்கள் வகுப்புப் பற்றுக் கொண்டு தங்கள் வகுப்பாரை வெற்றி பெறச் செய்து விட்டார்கள். அவ்வட்டத்தின் வாக்காளர் தொகை இருநூற்றுமுப்பது. மற்ற வட்டங்களில் நிற்பதினும் பிராமணர்கள் பெரும்பான்மையோராக உள்ளவட்டத்தில் நின்றால் வெற்றி பெறலாமென்று கருதினர்போலும். ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப் ஏமாற்றமடைந்தார். காங்ரஸ் பக்தராகிய ஸ்ரீமான் ஜோஸப் நிலை இவ்வாறு முடிந்தமைதனில், மற்றையோர் நிலையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? ஜோஸப்புக்கு நல்லபாடம். வெற்றி பெற்ற பிராமணர் விலகி மீண்டும் ஜோஸப்பை அவ்வட்டத்தில் நிறுத்தி அவரை வெற்றியுறச் செய்ய வேண்டுமென்று சிலர் முயல்கிறார். வெற்றி பெற்ற பிராமணர்விலக மாட்டார். ஒருவேளை மற்ற பிராமணத்தலைவர்கள் வலியுறுத்தலால் அவர் விலகினும், மீண்டும் அவ்வட்டத்தில் ஸ்ரீமான் ஜோஸப் நிற்பது பெருந்தகைமையாகாது. காங்கிரஸ் பெயரால் வகுப்பு வாதத்தைப் பிராமணர்கள் வளர்த்துவருவதை உலகம் இப்பொழுது உணர்ந்து வருகிறது. சமயம் நேரின் மிக விரிவாக இது குறித்து எழுதுவோம். பிராமணர்கள் உள்ளத்தில் வகுப்புவாதம் உள்ளமட்டும் நாட்டிலும் வகுப்புவாதம் வளர்ந்தே வரும். வகுப்புவாதத்தினின்றும் விலகுமாறுபிராமணர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். "நவசக்தி."

## மதராஸ் சர்க்கார்
## சட்ட (பொது) லாகா. அறிக்கை.

1. இதனால் தெரியப்படுத்துகிறதென்னவென்றால், இங்கிலாந்திலும் வட அயர்லாந்திலும் பிரவேசிக்க ஆஸ்த்ரியப் பிரஜைகளுக்கு பிரிட்டிஷ் வைசா (Visa) வும் ஆஸ்தரியாவில் பிரவேசிக்க பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு ஆஸ்திரியவைசாவும் இனி தேவையில்லை.

2. ஆகிலும், இங்கிலாந்திலும் வட அயர்லாந்திலும் பிரவேசிக்க ஆஸ்திரியப் பிரஜைகள் பாஸ்போர்ட் பெற்றிருக்க வேண்டியதுடன் அதில் கண்டிருக்கும் ஷரத்துக்களுக்கு உட்பட்டு நடப்பதாக பிரிட்டிஷ் உள்நாட்டு அதிகாரிகளைத் திருப்தி செய்ய வேண்டும்.

3. முதல் பாராவில் கண்ட நாடுகளைத் தவிர, மேன்மை தங்கிய மன்னர் பிரானின் இதர நாட்டில் ஆஸ்திரியப் பிரஜைகள் பிரவேசிக்க வேண்டின், வேறு அறிக்கைவெளியிடப்படும் வரை பிரிட்டிஷ் வைசா பெற்றிருக்க வேண்டும்.

செ.ஜா கோட்டை } பி. சீதாராமய்யா
மதராஸ் 12-9-27 } சர்க்கார் காரியதரிசி


## பார்ப்பனரல்லாத வாலிப சங்க மகாநாடு.

அக்டோபர் 22, 23 தேதி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடை பெறும்

அக்கிராசனர்:—மைசூர் சட்டசபை மெம்பரும், பெங்களூர் சேர்மெனும், மைசூர் பார்ப்பனரல்லாதார் தலைவரும் ஆகிய ஜனாப் மகம்மது அப்பாஸ்கான் சாயபு அவர்கள்

கொடியேற்றுபவர்:—சர். பி. ராமராய நிங்க வாரு, பனகால்ராஜா, பார்ப்பனரல்லாதார் தலைவர், சென்னை.

வரவேற்புக் கட்டணம் 1—0—0 }
பிரதிநிதி கட்டணம் 0—4—0 }

23 தேதி இரவு
சமபந்தி போஜனம் 0—8—0

## ஞான திருஷ்டி அல்லது திரிகால தீபம்.

இந்நூல் வடமொழியில் முன்னோர்களால் பனை ஓலைச் சுவட்டில் எழுதியிருந்ததை இப்போதுதான் தமிழில் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது. இப்புத்தகம் ஒன்று உங்களிடம் இருக்குமானால் யார் எக் கேள்வி கேட்டாலும் சுக்ஷிணியைப் போன்ற பதிலும் நீங்கள் நினைக்கும் சகல காரியத்தின் பலாபலன்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் வாழ் நாள் முழுமையும் ஜோசியரைத் தேட அவசியமே இல்லை.

தபாற் செலவுடன் விலை ரூ 1

ஜானகிராம் அன் கம்பெனி, வெங்கட ராமய்யர் வீதி, மதராஸ்.


## "பிரமாபுரம் ஆதிதிராவிட மஹாநாடும் காக்ஷிசாலையும்"

வடாற்காடு ஜில்லா காட்பாடியை அடுத்த மேற்படி கிராமத்தில் ஓர் மகாநாடு ராவ்பஹதூர் M. C ராஜா அவர்களின் அவைத்தலைமையின் கீழ் நடத்தப்படும் அதுகாலை ஜில்லா போலீஸ் சூப்பரின்டென்டென்டு துரை Mr J M Green அவர்களால் மஹாநாடும் சிறந்ததான காக்ஷிசாலையும் திறக்கப்படும். குறிக்கப்பட்ட அம்மையர்களாலும் மற்றும் வாக்காளர்களாலும் நீதிகளமைந்தனவான உபந்யாசங்கள் நிகழ்த்தப் பெறுவதுடன் பல அரிய தீர்மானங்களும் அமுலுக்கு கொண்டுவரப்படும். காக்ஷி சாலையை கண்ணியப்படுத்த விரும்புவோர் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் கவிகளாலும் புராணிகராலும் இயற்றப்பட்ட நூல்கள், உழவு, கைத்தொழில் சம்பந்தமான கருவிகள், சுகாதார விடுதிகள் உருவம் அனுப்பும்படியாக கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மது விலக்கு, சிசுசம்ரக்ஷணை பிரசாரங்கள் ஆற்றவல்ல மதிநுட்பம் வாய்ந்த குலாபிமானிகளான அம்மையர்கள் சமூகமுன்னேற்றத்தின் சேவைகளுக்கு முந்துவரென எதிர்நோக்கப் படுகின்றது. கடிதப்போக்குவரத்து "காரியதரிசி, பிரமாபுரம் ஆதிதிராவிட மஹாநாடு, உரிகம் போஸ்டு, கோலார் தங்க வயல்" என எழுதவும்.


## கதரன்பர்களுக்கு வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது சடங்கல்லவா, அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனுவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1 க்கு
28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ய எல்லா விதமான ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்

M. V. கருப்பண்ண செட்டியார்,
திருப்பூர்,
(தென் இந்தியா.)

இப்பழனியில் அநேக நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும்பெற்று தீராதென கைவிடப்பட்டவியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.



பார்லாம்பிகை டிரேட் மார்க்

# முதல் நெம்பர் தங்க பற்பம்.

## தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பலவித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அதிகஇன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய் | 36—0—0 | |
| இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை | 20—0—0 | [தபால் சார்ஜ் பிரத்தியோகம்] |
| மேற்படி 25-நாள் விலை | 10—0—0 | |
| அனுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ. | 10—0—0 | |

# அசல் வெள்ளி பற்பம்

## பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி பஸ்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், சினுக்கிரும்பல், தேமல் விழுதல் வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், திரேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கி யிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவிர்த்தியாகும் திரேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது இதை மதனகாமேஸ்வரிலேகிய அனுபானத்தில் சாப்பிடவேணடும். ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய் 15—8—0

| | | | |
|---|---|---|---|
| ½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம | விலை | 7—8—0 | தபால் சார்ஜ் பிரத்தியேகம் |
| மதன காமேஸ்வரி லேகியம் 1-சேர் டின் ... ... | விலை | 8—0—0 | |

## நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி காரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் நீற்றுப்போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினால் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்திசெய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்]விலை ரூ.16-0

## தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம், ஈளை, கோழை கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை | ரூ. | 7—0—0 | [தபால் செலவு வேறு] |
| 2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை | ரூ. | 5—0—0 | |
| லேகியம் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயணம் 10 நாளைக்கு விலை | ரூ. | 3—8—0 | |

## நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுறை மருந்து.

| | | | |
|---|---|---|---|
| முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை | ரூ. | 10—0—0 | தபால் செலவு வேறு |
| 2-ம் நெமபர் பற்பம் புட்டி 1-க்கு விலை | ரூ. | 6—0—0 | |

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுர்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டு, அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார் இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன் எல். கல்யாணராமய்யர் ரிடயர்டு தாசில்தார் அண்டு செகிரி திவான்:—

'அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இறங்குவதும், திரேக அசதியும், தலை மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷ்டப்பட்டு இம் மலாய் நாட்டில அநேக மருந்து சாப்பிட்டும், ஊசி மூலியமாக திரேகத்தில் மருந்து செலுத்தியும் சவுகரியப்படாமல் கஷ்டப்பட்டு இருக்கையில், சென்னையில் பிரசுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். ஏழையின் மீதில் கிருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும் 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரிசியிடையாகச் சேர்த்து கால மாலை இரு வேளையும் மேற்படி பற்பங்களுக்கு அனுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு, தங்களால் அனுப்பப்பட்ட சந்தனாதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம், மேற்படி சுவாமியுடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு, குமட்டல் வாந்தி முதலியவை இல்லை. ருசியுடன் கூடியது. பத்தியம தவறினால் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதிஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு சேரில் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக் கொடுப்பாராக! அ. ஆறுமுகம் செ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய் நாடு.

சற்குரு மகாதேவஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அளவு கடந்த சமத்துவம் வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சொஸ்தம் கொடுப்பவர், சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணாதிசயங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்தில் கஷ்டப்பட்டேன். வியாதியின் குறி மதன் படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன். நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் இந்த சுவாமிகளிடம் என்னைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சொஸ்தம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது சேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது. நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில வாழ இருக்கிறேன், கஷ்டப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமாக் கடவுளை வணங்குவேன். (Sd. K. V. வெங்கடேஸ்வர அய்யர்,

பழனி, 19-2-1925 [முதல் நெமபர் தாம்பிர பற்ப விளம்பரத்தை அடுத்த வாரத்தில் காண்க] ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாககுக்கு ஆன்றே எழுதவும்.

Tel. Address: "Sarguru" Palni. } ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள், { தந்தி விலாசம்: "சற்குரு" பழனி.

சதானந்த மெடிக்கல் ஹால் பழனி, (தென்னிந்தியா.)

மலாய் நாட்டிற்கு ஏக ஏஜண்டு, M. E. நாயுடு அவர்கள் டிரஸ்ஸர், 85 டேனுக், கோடங்குரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

## தொண்டர்கள் தேவை.

தொண்டர்கள்,

(1) பகுத்தறிவும், தேசபக்தியும், தியாகபுத்தியும், திடசாத்திரமும், சுயமரியாதையுமுள்ள தீரர்களாயிருத்தல் வேண்டும்.

(2) சாப்பாட்டிற்குப் பிறரை எதிர்பாராதவராயும், தாம் இல்லாத காலத்து தம்மைச் சார்ந்தோரை கஷ்டத்திற்குள்ளாக்காதவராயும், யாதொரு உத்தியோகத்திலு மில்லாதவராயும், தலைவர்களின் ஆணை கிடைத்தவுடன் சற்றும் தயங்காமல் உணர்ச்சி மேற்கொண்டு கிளர்ச்சி செய்து அதன் பயனை அனுபவிக்க தயாராய் இருப்பவராயும் முன் வரவேண்டும்.

(3) 1927-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-க்குள் தமிழ்நாட்டில் உள்ள சுயமரியாதையுள்ள இவ்வியக்கத்தில் அனுதாபங்கொண்ட 18 வயதிற்கு மேற்பட்ட அருமைச் சகோதரிகளும் சகோதரர்களும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி தொண்டராகப் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

### நடை முறைகள்.

சுமார் 100 தொண்டர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் ஒரு மகாநாடு ஒன்றைக் கூட்டி (இடமும் காலமும் குறிக்கப்படும்) சில தலைவர்களையும் கலந்தும் ஆலோசித்து அக்டோபர் 15-ந் தேதிக்குள் இக்கிளர்ச்சியின் திட்டத்தையும் பற்றி முடிவாகத் தீர்மானம் செய்யப்படும் அப்பொழுதே தொண்டர் படைக்கும் இவ்வியக்கத்திற்கும் தலைவர்களையும் நிர்வாகிகளையும் தெரிந்தெடுக்கவேண்டும் அக்டோபர் 16-ந்தேதி முதல் 31-ந்தேதி வரையில் இவ்வியக்கத்திற்கு சென்னையை முக்கிய ஸ்தலமாகக் கொண்டு இவ்வூரில் பலமான சுயமரியாதைப்பிரசாரம் செய்யப்படவேண்டும். மேற்படி 25-ந்தேதியிலேயே சென்னையில் உள்ள காப்பிக் கிளப்புகாரர்களும், தென் இந்தியா ரயில்வேக் கம்பெனியாருக்கும் 25 நாள் நோட்டீசு கொடுத்து ஜாதி வேற்றுமை காட்டும் சகல ஏற்பாடுகளையும் எடுத்துவிட வேண்டுமென்றும் தவறினால் நவம்பர் மாதம் 1உ முதல் அதற்காக கிளர்ச்சி செய்வோமென்றும் அறிவித்து விட வேண்டும். நம் வேண்டுகோளுக்கிணங்கி வந்து நம்முடன் ஒத்துழைக்கும் காப்பி கிளப் காரர்களின் பெயரும் விலாசமும் பிராமணரல்லாதார் பத்திரிகைகளில் அடிக்கடி அவ்வப்போது வெளியிடப்படவேண்டும்.

தொண்டர்களின் பெயரும் விலாசமும் அவ்வப்போது சேரச்சேர வெளியிட ஏற்பாடு செய்கிறேன். தொண்டர்களின் மகாநாடு கூடும் வரையில் தற்காலீகமாக நான் சில வேலைகளையும் கீழ்கண்ட விலாசத்தில் கவனித்து வருகின்றேன். பண உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் தயவுசெய்து காத்திருந்து தொண்டர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கிறதை யறிந்து பின்னர் அனுப்பும்படி பார்த்துக் கொள்ளவேண்டியது.

சகோதரி—சகோதரர்களே! உடனே சுயமரியாதைத் தொண்டர்களாய்ச் சேர்ந்து எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும் தடைப்படாத சுதந்தரப் பேற்றைப் பெற்று நீங்கள் வாழ்தல்வேண்டுமென்பதே எனது சத்தியமான அதி தீவிர விருப்ப முயற்சியாக இருந்து வருகின்றது.

**குறிப்பு.**- இந்த இயக்கத்தை ஏன் இச்சமயத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று சிலர் கேட்கலாம். தென்னாட்டிலுள்ள பிராமணியக் கொடுமையை வடநாட்டார் அறிந்து நம்மிடம் அநுதாபம் காட்டமுடியாதபடி சில சுயநல, சுயமரியாதைத் துரோகிகள் செய்து விட்டால் அன்னார் வெட்கித் தலைகுனிய காங்கிரஸ் நடக்கும்போது வரும் வடநாட்டார் நம் நிலையுணர்ந்து நன்மையடையவும் காந்தியடிகள் சுற்றுப்பிரயாணத்தில் முக்கியமாய் தமிழ்நாட்டில் நம் உணர்ச்சியை அறியவும் நம் விரோதிகளின் சூழ்ச்சியிலகப்பட்டு அவர்களின் சுயநல கௌரவத்திற்காக நம் இளைஞர்கள் தவறுதலான வழியில் செலுத்தப் படாமல் இருப்பதற்காகவுமே இவ்வியக்கம் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டது. சுபம்.

## தேரூர் உபாத்திமைச் சங்கத்தில் பார்ப்பனக் குறும்பு.

தேரூர், போர்டு எலிமெண்டரி ஆண் பாடசாலையில் 10—9—27ல் உபாத்திமைச் சங்கம் கூடிற்று. அதில் அக்கிராசனம் வகித்தவர் ஓர் பார்ப்பனர், காரியதரிசியும் ஓர் பார்ப்பனர். அன்று தேதியில் ஒற்றுமை என்கிற விஷயத்தைப் பற்றிப் பேசினவரும் ஓர் பார்ப்பனர். இவர் இவ்விஷயத்தைப்பற்றிக் கூறிக்கொண்டு வரும்போது சில மேற்கோள்களை எடுத்துக்காட்டினர். அதில், தற்காலத்தான் ஒற்றுமையைப்பற்றி ஒவ்வொரு சங்கத்திலும் பேசப்பட்டுவருகிறது, இதற்குமுன் பேசப்பட்டதே கிடையாது. மேன்மை தங்கிய விக்டோரியா மகாராணி காலத்திலும், எட்வர்ட் அரசர் முதல்பாதி அரசாட்சியிலும் ஒற்றுமையைப்பற்றி கூறினதே கிடையாது. காங்கிரஸ் கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும் தோன்றி, ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு கூட்டமாகவிருந்த இந்து மத விஷயங்களை வெளிப்படுத்தினதினால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை சீர் குலைந்தது என்று கூறினர். பாவம் இப்பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாருக்கு இழைத்துவரும், வருகின்ற தீங்குகளை, அப்படியே சர்வக் கடவுள் கருணைகூர்ந்தார் போலும்.

மேலும் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் உள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர்களுக்கு அதிகக்கடினமான விஷயங்களையும், பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களுக்கு இலேசான விஷயங்களையும் கொடுத்து விவகாரங்கள் நடத்தப்பட்டுவருகிறது என்றார். பார்ப்பனர்களுக்குத்தான் அதிக புத்தி கூர்மை, அதனால் பார்ப்பனர்களைக்கொண்டு மிகக் கடின விஷயங்கள் நடத்தப்பட்டு வருகிறது என்பதை இப்பார்ப்பனர் தம் உள்ளக் கிடக்கையாய்க் கொண்டு பார்ப்பனரல்லாதாரை இழித்துக் கூறினர். என்னே! இப்பார்ப்பனரின் ஒற்றுமைக்கூற்று. மேலும் இவர் கைவிரல்களில் ஏற்றத் தாழ்வு இருப்பதுபோல், மானிடவர்க்கத்திலும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் உண்டு என்று ஓர் ஆதி திராவிட உபாத்தியாயரைப் பார்த்து பஞ்சமன்—பஞ்சமன் என்று பல தடவைகளில் மிகத் தாழ்வுபடுத்திக்கூறி அமர்ந்தார். பிறகு ஓர் ஆதி திராவிட உபாத்தியாயர் 'எங்களை பஞ்சமன் என்று சொல்லுவது கிடையாது, ஆதி திராவிடர் என்று கூறப்படுகிறது, கவர்மெண்டாராலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது ஆகையால் எங்களை இவ்விதத் தாழ்வுபடுத்திக் கூறினது இச்சங்கத்திற்கழகல்ல' எனக் கூறி அமர்ந்தார். பிறகு ஓர் உபாத்தியாயர் "வருணாஸ்ரம பிரித்தவர்கள் நான்கு வருணங்களைத்தான் பிரித்திருப்பதாகத் தெரிகிறது. பஞ்சமன் என்ற ஓர் வருணத்தை உண்டாக்கினதாகத் தெரியவில்லை. ஆகையால் முதலில் பேசிய அங்கத்தவர் அவ்வார்த்தையை வாப்பிஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று கூறினார். உடனே அப்பார்ப்பன ஆசிரியர் "வாப்பிஸ்வாங்கிக்கொள்ளமாட்டேன். தொன்று தொட்டு வந்த வார்த்தையை நாம் ஏன் தள்ளவேண்டும். அப்படித் தள்ளுவது கூடாது" என்று கூறினார். என்னே இப்பார்ப்பனரின் தைரியம். பிராமணத் தன்மையினின்றும் நீங்கியவர்கள் சண்டாளன் என்று இவர்கள் வேதமே கூறுகின்றன. ஆகையால் இதற்கு இப்பார்ப்பனர் என்ன சமாதானம் கூறப் போகிறார்.

பிறகு அக்கிராசனாதிபதி மத விஷயங்களை இங்கு புகுத்தக்கூடாது என்று கூறினாரேயொழிய, தாழ்வான வார்த்தைகளை உபயோகித்தது தவறு என்று கூறினாரில்லை. என்னே! இப்பார்ப்பனர்களின் ஒற்றுமை. பிறகு ஓர் அங்கத்தவர், "முதலிலேயே தடுத்திருந்தால் மிகவும் நல்லது. இப்பொழுது தடுப்பது அவ்வளவு உசிதமல்ல" எனக்கூறினர். முதலில் பேசிய இப்பார்ப்பன ஆசிரியர், தன்னிடத்தில் இவ்வளவு வெறுப்புப் பிரிவினைகளை வைத்துக்கொண்டு ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறதென்று நாம் கடாவுவதற்கு என்ன சமாதானம் கூறப்போகிறார். இப்பார்ப்பனரின் ஒற்றுமையே ஒற்றுமை. பலா! பலா!!.

உண்மையுரைப்போன்.

### அநுதாபம்.

இந்த மாதம் சென்ற 7உ சேலம் ஜில்லா தெலுதாபாதநில் மிட்டாதார் ஸ்ரீமான் வசந்த ரங்கநாத செட்டியாரவர்கள் குமாரர் 18 வயதுடைய மாணவர் வசந்த வல்லப செட்டியார் என்பவர் விண்ணுலகடைந்தார். அவர் தம் பெயருக்குத் தக்கபடி கிருஷ்ணகிரி உயர்தர பாடசாலையில் தேசபக்திச் சியில் கீர்த்திபெற்று விளங்கினார். மற்றும் தன் நண்பர்களிடத்தில் தான் காட்டிய அன்பால் "காகப்பா" என்னும் பெயரையும் பெற்ற இவ்வாலிபர் இந்த இளம் வயதில் சொற்பநாள் தேக அசௌகரியத்தினால் உயிர் துறந்தது அவரது பிராண சிநேகிதர்களின் துரதிர்ஷ்டமேயாகும். அவரைப்பிரிந்துவருந்தும் அவரது தாய் தந்தை உற்றார் உறவினர் சிநேகிதர்களுக்கு நமது அநுதாபத்தை இதன் மூலமாக அறிவிக்கிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### பார்ப்பனியமொழிந்த திருமணம்.

சோளவந்தானுக்கடுத்த மன்னாடிமங்கலம் திரு. S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தன் குமாரன் திரு. ஷண்முகம்பிள்ளை அவர்களுக்கு சாளது ஆவணி-மீ 23-உ அன்று சுய குருக்களைக்கொண்டு விநாயக பூஜைசெய்து திருமாங்கல்யதாரண முகூர்த்தம் நடத்தி கல்யாணசம்பவம் யாவும் அதே தினத்தில் முடித்து பந்து மித்திரர்களுடன் விருந்தருந்தி மகிழ்ச்சி அடைந்தார்கள் என்று

P. முத்துக்கருப்பணபிள்ளை எழுதுகிறார்.

## மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபானமில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குஓர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோருமெ எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும். கைகண்ட மருந்து

REGISTERED TRADE MARK MINSARA RASAM

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.





பழநி சி. எம. சாமி.

## குருதாம்பரபஸ்பம்

### சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்த்துவிட்டதென்று தினம் நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன வியாதிகளை விபரமாய் எழுதவும்

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25 ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ண குணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நீர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை


நாகப்பட்டணம் ரெயில்வே தொழிலாளர் மத்திய சங்க கட்டிட அஸ்திவாரக்கல் நாட்டு வைபவம் மகாத்மா காந்தியடிகளாலும் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா சென்னை தோழர் எம். சிங்காரவேலு செட்டியார், அவர்கள் தலைமையிலும் முறையே 1927-ம் வருடம் செப்டம்பர் மீ 17-18 தேதிகளில் நடப்பதால் தாங்கள் விஜயம் செய்ய வேண்டுகிறேன்.

பொன்மலை 12—9—27 } டி. கிருஷ்ணசாமி பிள்ளை தலைவர்.


## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "நூடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலிய வைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.



## உறையூர் அங்கவஸ்திரங்கள்.

அசல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "வுறற" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

2¾ அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—12—0

ஷெ சரிகை சிர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உரையூர் போஸ்டு
திருச்சி



"அறிவு விளக்கம்"

ஓர் மாதத்தரப் பத்திரிகை

வருடசந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனாம்

"அறிவு விளக்கம்" ஆபீஸ்
உடுமலைப்பேட்டை

முந்துங்கள்!
ரூபாய் ஒன்றே
ஏமாந்து விடாதீர்கள்

முந்துங்கள்!!
ரூபாய் ஒன்றே
ஏமாந்து விடாதீர்கள்

## உலகப் பிரசித்திபெற்ற

# 5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

நேரிலிருந்து படிப்பதுபோல் தபால் மூலம் தொழிலுக்கு யாதொரு இடையூறன்றி, தமிழ் தெரிந்த எவரும் படித்து திருப்தியடையலாம். ஷை கோர்ஸை நேரில் வந்து படிப்பவர்கள் மாத மொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப் படித்திருக்கிறார்கள். நேரில்வந்து படிப்பதற்கு 50 மாணவர்களுக்கு மேல் எடுக்க இடமில்லை, ஆகையால செப்டெம்பர் 15-உக்குள் அப்படி படிக்க விரும்புவோர் ரூ. 5 அனுப்பி பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### ஐந்து வருஷ கல்வி ஒரே வருஷம்.

சே. எஸ். மரைக்காயர்:—நான் மூன்றும் வகுப்புப் படிப்போடு ஷை 5-மீ கோர்ஸில் 1923-ம் வருஷம் சேர்ந்து மாதமொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப்படித்தேன். இங்கிலீஷ் அட்சுரத்திலிருந்து ஆரம்பித்து, வார்த்தைகள், வாக்கியக்களமைந்த கேள்விகள், விடைகள், சம்பாஷணை, தந்தி எழுதுதல், கடிதம் எழுதுதல் முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டதில சமார் 50 மாணவர்கள் வரை பூர்த்தி செய்தார்கள். 5 மாதம் கோர்ஸ் முடிந்தவுடன் ஜூனியர் கோர்ஸில் சுமார் 9 மாதங்கள் வாசித்தேன். தற்சமயம் என் அறிவு சுமார் 5 வருஷப் படிப்பிற்கு மேலாக இருக்கிறதென்பது உண்மை. தபால் மூலம் அதே கோர்ஸை மாதம் ஒன்றுக்கு ரூபா 1 வீதம் கற்றுக்கொடுப்பது நம் தமிழ் நாட்டு ஏழை மக்களின் பொருட்டன்றி வேறல்ல.

### ஆங்கில பாஷையின் அஸ்திவாரம்.

எஸ். பக்கிரிசாமி பிள்ளை:—நான் 5-வது வகுப்பு வரை சுயமாகவே படித்து அநேக புஸ்தகங்களை வாங்கி வாசித்ததில் பிரயோஜனப்படாமல் ஷை கோர்ஸில் சேர்ந்து வாசிக்கிறேன். 1 மாதத்தில் முதல் கோர்ஸை முடித்துவிட்டு இரண்டாம் கோர்ஸ் படிக்கிறேன். பாடங்களில் ஆங்காங்கே கடின பதங்களுக்கு அர்த்தம், உச்சரிப்பு, குறிப்புகள், அப்பியாசங்கள், முதலியவை காணப்படுவதனால் உபாத்தியாயரின்றிப் படித்துக்கொள்ளலாம். சந்தேகங்கள், விடைகள் முதலியன சரியான பிரகாரம் திருத்தப்பட்டிருக்கின்றன. 4, 5, 6, 7 வகுப்பு மாணவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இது நல்ல அஸ்திவாரக் கோர்ஸ் என்றே சொல்லலாம். உடனே சேர்ந்து நன்மையடைவீர்களாக.

### உடனே எழுதுங்கள்.

## பிரின்சிபால், கேம்பிரிஜ் இன்ஸ்டிடியூட்,
## நாகூர்.

ஐயா, இன்று ரூபாய் 1 மணியார்டர் செய்திருக்கிறேன். என் பெயரை பதிவு செய்து கொண்டு உடனே முதல் கோர்ஸ் பாடங்களையும், பிராஸ்-பெக்டஸ் பாரங்கள் முதலியவைகளையும் அனுப்பி வையுங்கள். பாடம் முடிந்தவுடன் பணமனுப்பி ஒவ்வொரு கோர்ஸையும் பெற்றுக் கொள்வதோடு விடைகளை ஒழுங்காய் அனுப்பிவைக்கிறேன்.


பெயர்.............. ..................... தெளிவான விலாசம்.............................

### கோபி தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு.

இம் மகாநாடு நவராத்திரி விடுமுறை நாட்களில் 30-9-27 — 1-10-27 ல் கூடுவதாகத் தீர்மானித்திருக்கிறது ஷை மகா நாட்டில் வித்யா சம்பந்தமான கண் காட்சியும் நடத்தப்படும். வித்ய சம்பந்தமான சிறந்த கண்காட்சிப் பொருள்களுக்கும், கிராம நிர்மாணம், போதனை முறை, நூதன ஹாஸ்யக் கதைகள், புராதன கோயில் குளம் வைற்று ஆதியவைகளைப் பற்றி சிறந்த வியாசங்களுக்கும பரிசுப் பத்திரங்களும் பதக்கங்களும கொடுக்கப்படும். மற்ற விபரங்கள் காரிய தரிசியிடமிருந்து தெரிந்து கொள்ளலாம.

G. N. புவனேஸ்வரய்யர்
காரியதரிசி
ஆரம்ப ஆசிரியர் மகாநாடு
கோபிசெட்டிபாளையம்.


முன் விலை ரூ 14 இப்போது ரூ 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



பெட்ரோமாக்ஸ் லைட்.
லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

மதன கல்ப லேகியம்.
மலக்கட்டு, பசியின்மை, தாதுநஷ்டம் சொப்பனஸ்கலிதம முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

மகா ரசகெந்தி மெழுகு.
தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ 4 வி. பி. வேறு கேட்லாக் இனும்.

சூதகரோக நிவாரணி.
பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, கரு வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம் விலை ரூ. 2. வி. பி. வேறு.
ஆனந் நிலையம், திருச்செங்கோடு.

சரீர மர்ம சாஸ்திரம்.
(ஓர் மானிட மர்ம நூல்.)
இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.
மாணிக்க விலாசம் பிரஸ்.
அருணாசல முதலி வீதி, மதராஸ்.

ஆரூடம்:— சர்ம ஞானமான கேள்விகள் 9-க்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.
வி எஸ் அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P. O. (S. I.).


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.